பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 28 ஞாயிற்றுக்கிழமை (13-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily சுடர்:228

# இடைக்கால நிர்வாக வரைபு நகலுடன் வெஸ்பேர்க் ஓரிரு நாளில் வன்னிக்கு!

## பிரதமரின் 'மக்கள் சந்திப்பு' திட்டம் ஆரம்பம்

கொழும்பு,ஜூலை13

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மக்களை சந்திக்கும் தனது திட்டத்தை செயற்படுத்த ஆரம்பித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக அவர் பொலன்னறுவை மாவட்டத்திற்குச் சென்றுள்ளார். மூன்று நாள்கள் அங்கு தங்கி இருக்கும் அவர் கட்சித் தலைவர்கள் மற்றும் பொது மக்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடுவார். அவர்களது குறைகளைக் கேட்டறிவார். அந்த மாவட்டத்தில் உள்ள சகல தேர்தல் தொகுதிகளிலும் அவர் இந்த 'மக்கள் சந்திப்பு'க்களை நடத்துவார்.

எந்நேரத்திலும் தேர்தலை எதிர் கொள்வதற்கு வசதியாக பிரதமர் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதாக அவதானிகள் கூறுகின்றனர்.(ம)

## தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசுவார்



கிளிநொச்சி,ஜூலை13

**வடக்கு-கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசின் வரைபு நகலுடன் நோர்வே சமாதானக் குழுவின் ஆலோசகர் ஜோன் வெஸ்பேர்க் எதிர்வரும் செவ்வாய் அல்லது புதன்கிழமை கிளிநொச்சிக்கு வரவுள்ளார்.**

இடைக்கால நிர்வாகம் குறித்த மேலோட்டமான வரைபு நகல் கடந்த வார நடுப் பகுதியில் வெஸ்பேர்க் மூலம் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், கடந்த வாரம் அரசின் வரைபு நகல் இல்லாமலேயே வெஸ்பேர்க் வன்னிக்கு வந்தார். விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அதன் பின் அவர் கொழும்பு திரும்பியிருந்தார். (18ஆம் பக்கம் பார்க்க)

### சமாதான முயற்சிகளுக்கு அழுத்தம் கொடுக்க

## துணை அமைச்சரை அனுப்புகிறது ஜப்பான்

டோக்கியோ,ஜூலை13

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை மீண்டும் முன்னெடுப்பது தொடர்பாக ஆராய்வதற்காக ஜப்பான் அரசு இந்த மாத இறுதியில் தனது வெளிவிவகாரத் துணை அமைச்சர் ரெற்சுரோ ஜனோவை (Tetsuro Yano) இலங்கைக்கு அனுப்பவுள்ளது.

ஜப்பானிய அரச வட்டாரங்கள் இந்தத் தகவலை வெள்ளியன்று வெளியிட்டன.

தனது விஜயத்தின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசவுள்ள அமைச்சர் ஜனு (18ஆம் பக்கம் பார்க்க)



**மாகாண மெய்வன்மை போட்டி விவரம்**

**2ஆம் பக்கத்தில்**



## உயர் பாதுகாப்பு வலயம் குறித்து ஆராய பிரான்ஸ் பாதுகாப்பு ஆலோசகர் வருகை

கொழும்பு,ஜூலை13

வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக ஆராய்ந்து ஆலோசனைகளை வழங்கவென, பாகிஸ்தானில் உள்ள பிரெஞ்சுத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கேணல் ரெம்பியாரோ ரெஸ்நொக் இந்த வார பிற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்கிறார்.

உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு நேரில் சென்று பார்வையிட உள்ள அவர் இராணுவ அதிகாரிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்துவார். உயர்பாதுகாப்பு வலயங்களை மீளாய்வு செய்வது தொடர்பாக இராணுவத்தினருக்கு அவர் ஆலோசனைகளை வழங்குவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 18ஆம் திகதி கொழும்பு வரும் கேணல் ரெம்பியாரோ ரெஸ்நொக் ஒரு வாரம் இலங்கையில் தங்கியிருப்பார். முப்படைத் தளபதிகளையும் பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரிகளையும் சந்தித்து உயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றி கலந்துரையாடுவார்.

யாழ்ப்பாணத்துக்கும் அவர் விஜயம் செய்யவுள்ளார். குடாநாட்டில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்களுக்குச் சென்று நிலைமைகளை நேரில் அவதானிப்பார். பலாலியில் உள்ள படை உயரதிகாரிகளுடனும் அவர் சந்திப்புக்களை நடத்துவார்.

குடாநாட்டு பொதுமக்கள் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துப் பேசுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயர் பாதுகாப்பு வலய விடயம் தொடர்பாக வெளிநாட்டு இராணுவ நிபுணர்கள் வந்து செல்கின்றபோதும், இதுவரை உருப்படியான திட்டங்கள் எவையும் செயற்படுத்தப்படவில்லை என்று பொதுமக்கள் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (ம-3)

## 82 பேர் கைது!

கொழும்பு,ஜூலை13

கொழும்பில் நேற்றுமுன்தினம் காலை முதல் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது 82 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பிரதிப் பொலீஸ்மா அதிபர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது இரண்டு துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதே வேளை, இராணுவத்தினரும் பொலீஸாரும் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் 97 வீதித் தடைகளையும் அமைத்து சோதனை நடத்தியுள்ளனர். (ம)

### ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டு

## போர் திணிக்கப்படுமானால் எதிர்கொள்வதற்குத் தயார்!

### தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



கிளிநொச்சி,ஜூலை13.

"ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அரசாங்கம் மாறி எம்மீது போர் திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார். ஆனால், இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பதில் நாம் உறுதியாக உள்ளோம்"

- இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

நேற்று சனிக்கிழமை தம்மைச் சந்தித்த தமிழ் ஊடகவியலாளர் முன்னணியின் பிரதிநிதிகளிடமே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்ச்செல்வன் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தற்போதைய ஆட்சி முறையின் கீழ் தமிழ் மக்கள் வெறுப்புற்றிருக்கின்றனர். அவர்களின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு.

வடக்கு - கிழக்குக்கான இடைக் (18ஆம் பக்கம் பார்க்க)

## எம்.பிமாருக்கும் உடற்சோதனை!

### பொலீஸ்மா அதிபர் உத்தரவு

கொழும்பு,ஜூலை13

நாடாளுமன்றத்துக்கு வரும் உறுப்பினர்கள் அனைவரையும் தயவு தாட்சண்யம் பார்க்காமலும் பயமின்றியும் உடற் சோதனைக்கு உட்படுத்துமாறு நாடாளுமன்றக் காவலில் ஈடுபடும் பொலீஸ் அதிகாரிகளுக்கு பொலீஸ்மா அதிபர் ஈ.ஆனந்தராஜா கண்டிப்பான அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

நாடாளுமன்றத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா பொலீஸ் மா அதிபரைக் கேட்டுக்கொண்டதன் பேரிலேயே அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குள் மலர்வளையங்களையும் சவப்பெட்டியையும் கொண்டுவந்ததைத் தொடர்ந்தே நாடாளுமன்றப் பாதுகாப்பு நடவடிக்கைகளை இறுக்குமாறு சபாநாயகர், பொலீஸ்மா அதிபரைக் கேட்டுக்கொண்டார். (ம)

## பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேலில்; ஆயுதக் கொள்வனவில் நாட்டம்

டெல்அவிவ்,ஜூலை13

பத்துநாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த வியாழனன்று இஸ்ரேலுக்கு வந்து சேர்ந்த இலங்கைப் பாதுகாப்புத் துறை அமைச்சர் திலக் மாரப்பன ஆயுதக் கொள்வனவு தொடர்பான ஒப்பந்தங்கள் பலவற்றை இறுதிசெய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சருடன் கடற்படைத் தளபதியும் இஸ்ரேல் வந்துள்ளார்.

அவர்கள் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் மற்றும் கடற்படை அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகின்றனர்.

இந்தப் பேச்சுக்களின் முடிவில் (18ஆம் பக்கம் பார்க்க)

### கடந்த மாதம் கிழக்குக் கடலில் கடற்படையால்

## மூழ்கடிக்கப்பட்ட கப்பலிலிருந்த பன்னிரண்டு பேரும் வீரமரணம்!

### புலிகள் நேற்று அறிவிப்பு

கிளிநொச்சி,ஜூலை13

கடந்த மாதம் 14ஆம் திகதி கிழக்குக் கடலில் கடற்படையினரால் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் எண்ணெய்த் தாங்கிக் கப்பலில் இருந்த 12 பேரும் வீரமரணம் அடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்துள்ளனர்.

சாவதேசக் கடலில் வைத்து புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சமயம் அதில் பன்னிருவர் இருந்துள்ளனர். அவர்களைக் கடற்படையினர் கைதுசெய்ததாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டி இருந்தனர். அவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்குக் கடற்படையே பொறுப்பேற்கவேண்டும் என்றும் அவர்கள் எச்சரித்திருந்தனர்.

ஆனால், கடற்படையினர் வரம் (18ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

தொகுப்பு : வசந்தன்





நேற்று நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாண மெய்வன்மைப் போட்டிகளை மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் ஆரம்பித்து வைப்பதையும் அருகில் உதவிப்பணிப்பாளர் கே.டபிள்யூ. விமலராஜன் நிற்பதையும் முதலாவது படத்திலும், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள் : அலுவலக படப்பிடிப்பாளர்)

# மாகாண மெய்வன்மைப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டம் முன்னணியில்!

யாழ்ப்பாணம்,ஜூலை13

வடக்கு - கிழக்கு மாகாண மெய்வன்மைப் போட்டிகள் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின. நேற்றைய போட்டி முடிவுகளின் படி யாழ்.மாவட்ட அணி முன்னணியில் உள்ளது.

நேற்றுக்காலை 9.00 மணியளவில் சம்பிரதாயபூர்வமாக போட்டிகள் ஆரம்பமாகின. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலகநாயகம்போல், வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே.டபிள்யூ. விமலராஜன் ஆகியோர் பாண்ட் வாத்தியம் சகிதம் மைதானத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

தொடர்ந்து இப்போட்டிகளில் பங்குபற்றிய அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த வீர வீராங்கனைகளும் மாவட்ட விளையாட்டு அதிகாரிகளும் தத்தமது மாவட்டங்களின் பதாகைகளை தாங்கியவாறு அணிவகுத்து மைதானத்திற்கு வருகைதந்தனர். அவர்களின் அணிவகுப்பு மரியாதையை யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள உதவிப் பணிப்பாளரும் ஏற்றுக்கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின்




சார்பாக விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவும் நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

கடந்த ஆண்டு இடம்பெற்ற மாகாண மட்டப் போட்டியில் பெண்கள் பிரிவில் 3 சாதனைகளை நிலைநாட்டிய யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி கே.மிதிலா ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைத்தார்.

நேற்றைய நிகழ்வுகள் பெண்களுக்கான 200 மீற்றர் தெரிவு ஓட்டப் போட்டியுடன் ஆரம்பமாகியது.

கடந்த வருடங்களை விட கூடுதலான வீரவீராங்கனைகள் இம்முறை போட்டிகளில் கலந்துகொண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இப்போட்டியில் சிங்கள, முஸ்லிம் வீர வீராங்கனைகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

நேற்று நடந்த போட்டிகளின் புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் 65 புள்ளிகளைப் பெற்று முன்னணியில் உள்ளது. திருமலை மாவட்டம் 51 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளது. மூன்றாம் இடத்தில் 22 புள்ளிகளுடன் அம்பாறை மாவட்ட அணி இருக்கிறது.

கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அணிகள் தலா 6 புள்ளிகளைப் பெற்று 4ஆவது இடத்திலும் முல்லைத்தீவு மாவட்டம் 5 புள்ளிகளைப் பெற்று 5ஆம் இடத்திலும் வவுனியா மற்றும் மன்னார் அணிகள் தலா ஒவ்வொரு புள்ளிகளைப் பெற்று 6ஆம் இடத்திலும் உள்ளன.

(ம-5-86)

## விளையாட்டு

## தாச்சிப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை13

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கட்டுடை விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4 மணி - கைதடி வளர்மதி வி.க. எதிர் ஊரங்காவற்றுறை மகமாரி வி.க.

★ மாலை 5 மணி - மானிப்பாய் ஆனந்தா வி.க. எதிர் மயிலிட்டி வள்ளுவர் வி.க. (ம-5-86)

## கிரிக்கெட் கால் இறுதியாட்டம்

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தும் கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் கால் இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ காலை 8 மணி - பற்றீஸியன் வி.க. எதிர் சென்றல் வி.க.

★ பிற்பகல் 1 மணி - யங்ஸ்ரார் வி.க. எதிர் யாழ். பல்கலைக்கழகம் வி.க. (ம-5)



திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஜே.நதிகா ஈட்டி எறிகிறார்.

## இன்று இறுதி நிகழ்வுகள்

வடக்கு - கிழக்கு மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாடு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனும் சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா மற்றும் முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் மரியதாஸ் ஆகியோரும் கலந்துகொள்வர். (ம-5)

## குண்டெறிதலில் புதிய சாதனை!




வடக்கு - கிழக்கு மாகாண மட்ட தடகளப் போட்டிகளின் முதல்நாள் நிகழ்வில் குண்டெறிதல் போட்டியில் யாழ்.மாவட்ட வீரர் மாணிக்கவாசகர் பிரதீப்குமார் புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டினார்.

யாழ்.மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் பிரதீப்குமார் 12.96 மீற்றர் தூரத்துக்கு குண்டெறிந்தார்.

இதற்கு முன்னர் 2001 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.ஆதவன் 12.20 மீற்றர் தூரம் எறிந்தமையே சாதனையாக இருந்தது. அதனை பிரதீப்குமார் முறியடித்துள்ளார். (ம-5)

## "வாழ்வில் மறக்கமுடியாத பொன்னாள் இன்று"-பிரதீப்



"இன்றைய நாள் எனது வாழ்நாளில் மறக்கமுடியாத பொன்னாளாகும். இந்த நாளை எதிர்பார்த்து நீண்டநாள்களாக பயிற்சியில் ஈடுபட்டு வந்தேன். நான் பாடசாலை மாணவனாக இருந்த காலப்பகுதியில் இத்தகையதொரு சாதனையை ஏற்படுத்துவேன் என்று கனவிலும் கூட எண்ணிப்பார்த்ததில்லை."

- இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு-கிழக்கு மாகாணமட்டப் போட்டியில் குண்டெறிதல் போட்டி நிகழ்வில் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ள மாணிக்கவாசகர் பிரதீப்குமார்.

27 வயதான இவ்வீரரிடம், இச்சாதனை பற்றிக் கேட்டபோது அவர் மிகுந்த மகிழ்ச்சியோடு எமது செய்தி

(18ஆம் பக்கம் பார்க்க)




ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்ற திருமலை மாவட்ட வீரர் எஸ்.பிரசன்னா

## நேற்றைய போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை13

வடக்கு - கிழக்கு மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டியில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டிகளின் முடிவுகள்:

**200 மீற்றர் ஓட்டம் (ஆண்கள்)**

முதலாமிடம் - திருகோணமலை - ஜே.நிரஞ்சன், 2ஆம் இடம் - மட்டக்களப்பு - எஸ்.ரமணன், 3ஆம் இடம் - அம்பாறை - ஏ.நௌஷாட்.

**200 மீற்றர் ஓட்டம் (பெண்கள்)**

முதலாமிடம் - யாழ்ப்பாணம் - கே.மிதிலா, 2ஆம் இடம் - அம்பாறை - டபிள்யு.ஏ.ஏ.ஷிராணி, 3ஆம் இடம் - வவுனியா - எம்.மொஷாந்தி.

**400 மீற்றர் (ஆண்கள்)**

முதலாமிடம் - திருகோணமலை - எஸ்.பிரசன்னா, 2ஆம் இடம் - அம்பாறை - ரி.எஸ்.பி.உடுகம்புர, 3ஆம் இடம் - திருகோணமலை - எஸ்.டி.எஸ்.துஷந்த.

**400 மீற்றர் (பெண்கள்)**

முதலாமிடம் - யாழ்ப்பாணம் - கே.மிதிலா, 2ஆம் இடம் - திருகோணமலை - ஏ.ஏ.மதுபாசினி, 3ஆம் இடம் - திருகோணமலை - எஸ்நிரோஜினி.

**நீளம் பாய்தல் (ஆண்கள்)**

முதலாமிடம் - திருகோணமலை - ஆர்.ரதீஷன், 2ஆம் இடம் - மட்டக்களப்பு - கே.பிரதீபராஜ், 3ஆம் இடம் - திருகோணமலை - வி.சுஜாந்தன்


**நீளம் பாய்தல் (பெண்கள்)**

முதலாமிடம் - யாழ்ப்பாணம் - கே.மிதிலா, 2ஆம் இடம் - யாழ்ப்

(17ஆம் பக்கம் பார்க்க)



உயரம் பாய்தலில் முதலிடம் பெற்ற கண்ணன்



இரண்டாமிடம் பெற்ற கிஷோக்குமார்

படங்கள் : பிரேம்

# வைகோ வெளியே வராவிடில் நாங்கள் வெளியேறுவோம்!

## மத்திய அரசுக்கு கருணாநிதி எச்சரிக்கை



சென்னை,ஜூலை13

பொடா சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோவும் மற்றவர்களும் வெளியே வர வேண்டும்; இல்லாவிடில், வெளியேயார் (தி.மு.க,ம.தி.மு.க) வருவார்கள் என்று தெரியாது என்று மத்திய அரசுக்கு தி.மு.க தலைவர் கருணாநிதி எச்சரிக்கை விடுத்தார்.

வைகோவின் ஓராண்டுச் சிறைவாசம் நிறைவடைவதை ஒட்டி, சென்னையில் ம.தி.மு.க சார்பில் வெள்ளிக்கிழமை நடந்த கூட்டத்தில் அவர் இதனைத்தெரிவித்தார்.

பொடா சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படமாட்டாது என்று பிரதமர் வாஜ்பாய் உறுதி கூறினார். பின்னர், சில மாநிலங்களில் பொடா சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதாகக் குற்றச்சாட்டு எழுகிறது. அது நிரூபிக்கப்பட்டால், பொடா சட்டம் பற்றி மத்திய அரசு பரிசீலிக்கும் என்று வாஜ்பாய் கூறினார்.

பொடா தவறாகப் பயன்படுத்தப்படவில்லையா? வேலூருக்குச் செல்லுங்கள். வைகோவைப் பாருங்கள். இன்னொரு உதாரணம் தேவையா? சந்தேகப்பட்டுத்தானே ஜோர்ஜ் பெர்னாண்டஸை அனுப்பினீர்கள்? அவரும் வந்து பார்த்துவிட்டு. ஆமாம் பொடாவில்தான் வைகோ கைது செய்யப்பட்டு இருக்கிறார் என்றார். அதற்குப் பிறகும் ஏன் மௌனம்?

ஆராய்வதற்காக போடப்படும் என்று அத்வானி உறுதிமொழிந்தார். அந்தக் குழு ஆராய்ந்ததாகவோ, அதனால், ஏதாவது நடவடிக்கை ஏற்பட்டதாகவோ தெரியவில்லை.

பிரகாஷ்சிங் பாதல் வீட்டில் பொலீஸ் சோதனையிடுவதைச் சகித்துக்கொள்ள முடியவில்லை என்று அத்வானி கூறுகிறார். இங்கே தமிழ்நாட்டில், அரசின் அடக்குமுறையால் நாங்கள் வேட்டையாடப்படும்போது, பொடா சட்டம் எங்களை ருசி பார்க்கும்போது, சகிக்கமுடியவில்லை என்ற வார்த்தை அத்வானியிடம் இருந்து வரவில்லையே ஏன்? இதை எப்படிச் சகித்துக் கொள்கிறீர்கள்? எப்படித தாங்கிக் கொள்கிறீர்கள்? இதற்கு பதில் கூற வேண்டியது மத்திய அரசின் கடமை - என்றும் கருணாநிதி அங்கு தெரிவித்தார். (ஐ)



ஆபிரிக்க நாடான உகண்டாவுக்கு சென்றிருக்கும் அமெரிக்க அதிபர் அங்கு பெற்றோரை இழந்த குழந்தைகளுடன் உரையாடி மகிழ்கிறார்.

'எயிட்ஸ்' நோயின் கோரப்பிடியில் சிக்கியிருக்கும் உகண்டா நாட்டில் அந்நோயினால் உயிரிழந்தவர்களின் குழந்தைகள் இவர்கள். (ஐ)

### ஈரான் அதிபர் பதவி விலக தயார்

தெஹ்ரான்,ஜூலை.13

மக்கள் விரும்பினால் பதவி விலகத்தயாராக இருப்பதாக ஈரான் அதிபர் முகம்மது கதாமி பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

ஜனநாயகம்,சீர்திருத்தம் தொடர்பான தனது உறுதிமொழிகளை கதாமி நிறைவேற்றவில்லை என்று பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி எழுந்துள்ள நிலையில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளது முக்கியத்துவம் பெறுகிறது.

கதாமியின் பேட்டி நாளிதழ் ஒன்றில் கடந்த சனிக்கிழமை வெளியானது. "நாங்கள் மக்கள் எஜமானர்கள் இல்லை, தேசத்தின் சேவகர்களான நாங்கள் தேசம் விரும்பவில்லை என்றால் பதவிவிலக வேண்டியதுதான்" என்று அவர் தனது பேட்டியில் கூறியுள்ளார். பதவி விலகல் குறித்து அவர் பகிரங்கமாகக் கூறியுள்ளது இதுவே முதல் முறையாகும். (ஐ)

# விபசாரத் தொழில் நடத்த விண்ணப்பங்கள் குவிகின்றன

## நியூஸிலாந்தில் அதற்கு அனுமதி

நியூஸிலாந்தில் விபசார தொழில் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டு விட்டது. இனி செக்ஸ் தொழிலுக்கு அங்கு தடை இல்லை. ஆனால், சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு அங்கு இந்தத் தொழிலை நடத்த வேண்டும். விபசார விடுதி நடத்துபவர்கள் 18வயதுக்கு மேற்பட்டவர்களையே இதில் ஈடுபடுத்தவேண்டும்.

ஆரோக்கியம், சுகாதாரம் தொடர்பாக டாக்டர்களின் சான்றிதழ்களையும் பெற்றிருக்க வேண்டும். இந்தத் தகுதி உள்ள செக்ஸ் தொழிலாளர்களை விபசார விடுதி உரிமையாளர்கள் வேலைக்கு எடுக்கிறார்கள். மனுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன. இதற்கு கல்வித் தகுதி எதுவும் தேவையில் லையாம்.

செக்ஸ் தொழிலை சட்டரீதியாக அங்கீகரிக்கப்படும் சட்டம் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் நியூஸிலாந்து நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. சட்டத்தை எதிர்த்து 59 பேரும் ஆதரித்து 60 பேரும் வாக்களித்தனர். ஏற்கனவே 8,000 பேர் அங்கு செக்ஸ் தொழிலில் அங்கீகாரம் பெறாமல் ஈடுபட்டுள்ளனர்.

உலக அரங்கில்

### பிலிப்பைன்ஸில் நில நடுக்கம்

மணிலா,ஜூலை13

பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவுக்கு 600 கி.மீ. தென்கிழக்கே உள்ள இடத்தில் வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிசடர் அளவு கோலில இது 5.9 ஆகப்பதிவாகியிருந்தது.

எனினும், இந்த நிலநடுக்கத்தால் உயிர்ச்சேதமோ அல்லது பொருள் சேதமோ ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. (ஐ)

# ஈரானில் நில நடுக்கம்!

ஈரான் நாட்டில் வியாழக்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தில் கிராமவாசி ஒருவர் உயிரிழந்தார்; 20 பேர் காயமடைந்தனர்.

வியாழக்கிழமை இரவு 7.36 மணியளவில் முதல் நிலநடுக்கமும் அதைத் தொடர்ந்து 10.12 மணியளவில் இரண்டாவது நிலநடுக்கமும் ஏற்பட்டன.

முதல் நிலநடுக்கத்தின் அளவுரிச்டர் கருவியில் 5.6 ஆகப்பதிவாகியிருந்தது. இரண்டாவது நிலநடுக்கத்தின் அளவு 5.8 ஆகப்பதிவாகியிருந்தது.

ஜரிந்தாஷ்ட் என்ற சிறிய நகரைசுற்றியுள்ள கிராமங்களில் இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் அதிகமாக இருந்தது.

தொலைபேசி இணைப்புகளும் மின் இணைப்புக்களும் குடிநீர் விநியோகமும் இதனால் பாதிப்படைந்தன. அப்பகுதியில் இருந்த ஒரு பொலீஸ் நிலையமும் தரை மட்டமாகியது. மீட்புக் குழுவினரும் நிவாரண ஊழியர்களும் அப்பகுதிக்கு விரைந்துள்ளனர்.

இதேவேளை, தைவான் நாட்டில் வெள்ளிக்கிழமை காலை 8.31 மணியளவில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதில் உயிர்ச்சேதமோ அல்லது பொருள்சேதமோ ஏற்படவில்லை. ரிசடர் கருவியில் நிலநடுக்கத்தின் அளவு 4.6 ஆகப்பதிவாகியிருந்தது.

அடிக்கடி பூகம்பம் ஏற்படும் நாடுகளில் தைவானும் இடம்பெற்றுள்ளது. 1999ஆம் ஆண்டு தைவானில் ஏற்பட்ட பூகம்பத்தில் 2400 பேர் உயிரிழந்தனர். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் வீடிழந்தனர். (ஐ)

### 500 ரொக்கெட்டுக்கள் ஈராக்கில் மீட்பு!

பக்தாத்,ஜூலை13

ஈராக் தலைநகர் பக்தாத்துக்கு மேற்கில் 500 ரொக்கெட் குண்டுகளை அமெரிக்க இராணுவத்தினர் புதன் கிழமை பறிமுதல்செய்தனர்.

ரமாடி மற்றும் அல்அஸாத் நகரங்களுக்கு இடையே போக்குவரத்து சிக்னலில் நின்ற வாகனத்தை இராணுவத்தினர் சோதனையிட்டனர். அந்த வாகனத்தில் இருந்த 4 ஈராக்கியர்கள் கைதுசெய்யப்பட்டனர்.(ஐ)

# சர்ச்சையைக் கிளப்பும் இந்திப் படம் 'பூட்'

'பூட்' இந்தித்திரைப்படத்தால் என் மனநிலை பாதித்துவிட்டது. அந்தப்படத்தை தடைசெய்யுங்கள் என்று நீதிமன்றத்துக்கு போயிருக்கிறார் ஒருவர். அந்தப்படத்தை பார்த்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி நீதிமன்றம் பொலீஸாருக்கு உத்தரவிட்டிருக்கிறது.

இந்திப்பட உலகின் பிரபல தயாரிப்பாளரான ராம்கோபால் வர்மா இயக்கத்தில் சமீபத்தில் வெளிவந்திருக்கும் படம் 'பூட்'

அஜய் தேவ்கன், ஊர்மிளா மடோன்கர், நானாபடேகர், ரேகா, தனுஜா, பர்தீகான், விக்டர் பானர்ஜி உட்பட பலர் நடித்திருக்கின்றனர்.

இந்தியா முழுவதும் 'பூட்' படம் மிகப்பெரிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. திரையரங்குகள் நிறைந்த வண்ணம் உள்ளன.

'பூட்' படம் ஆவி பற்றிய கதையாகும். பங்குச்சந்தை மார்க்கெட் பற்றி ஆய்வுசெய்பவன் விஷால் (அஜய் தேவ்கன்). இவனது மனைவி சுவாதி (ஊர்மிளா மடோன்கர்).




மும்பையில் ஒரு புதிய பிளாட்டில் குடியேறுகிறார்கள். அங்குள்ள 12 ஆவது மாடியில் இருந்து ஏற்கனவே ஒரு இளம்பெண் கீழேவிழுந்து தற்கொலை செய்துகொண்ட தகவல் விஷாலுக்கு தெரியவருகிறது. ஆனால், இதைப்பற்றி அவன் கண்டுகொள்ளவில்லை.

ஆனால், சில நாள்களிலேயே அந்த வீட்டில் ஆவியொன்று நடமாடுவதை சுவாதி உணர்கிறாள்.

முதல் அவள் சாதாரணமாக எடுத்துக்கொண்டாலும் போகப்போக சுவாதியை மிரட்டும் பல சம்பவங்கள் நடக்கின்றன. மனரீதியாக பாதிக்கப்படுகிறாள் சுவாதி. அவளைக்குணப்படுத்தவும் ஆவியிடம் இருந்து மீட்கவும் விஷால் முற்படுகிறான்.

முடிவில் பயங்கரமான ஓர் உண்மையை அவன் கண்டு பிடிக்கிறான். இது தான் 'பூட்' படத்தின் கதை.

இதனை ராம் கோபால் வர்மா இயக்கி இருக்கும் விதமும், பின்னணி இசையும் ரசிகர்களை ஏகமாய் விரட்டுகிறது.

இரத்தம் உறைந்து போகக் கூடிய வகையில் திடும்...திடும்... என்று பல குளோஸ்அப் காட்சிகளை அமைத்து இருக்கிறார்.

ஒரு மணி 59 நிமிடம் ஓடக்கூடிய இந்தப்படத்தில் பாடல்கள் கிடையாது.

இந்தப்படத்தை குஜராத்மாநிலம், ராஜ்காட்டில் உள்ள ஒரு தியேட்டரில் கிஷோர் கிரி புபாட் கிரி கோசுவாமி என்பவர் ரசிகர்களுடன் அமர்ந்து படம்பார்த்தார்.

படம் பார்த்த இவர் ராஜ்காட் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் பூட் படத்தால் என் மனநிலை மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டது. அதில் உள்ள கொடூரமான காட்சிகளால் கடந்த 20 நாள்களாக நான் தூங்கவில்லை. தினமும் அவதிப்பட்டு வருகிறேன். உடனடியாக அந்தப்படத்தை தடைசெய்ய வேண்டும். டைரக்டர், நடிகர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார். (ஐ)

## கிரீஸ் தலைநகர் எதென்ஸில்

# அமெரிக்க நிறுவன கட்டடத்தை தகர்க்கும் முயற்சி முறியடிப்பு

கிரீஸின் எதென்ஸ் நகரில் அமெரிக்க இன்சூரன்ஸ்' நிறுவனத்தின் கிளை ஒன்றின் வாயிலில் வைக்கப்பட்டிருந்த குண்டை பொலீஸார் உரிய நேரத்தில் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்தனர். இதையடுத்து அந்தக் கட்டடத்தைத் தகர்க்கும் முயற்சி முறியடிக்கப்பட்டது.

குண்டு வெடிப்பு குறிப்பிட்ட இடத்தில் நடைபெறும் என்று தொலைக்காட்சி நிலையம் ஒன்றுக்கு அநாமதேய தொலைபேசி தகவல் வந்தது. இதையடுத்து, பொலீஸார் விரைந்து சென்று நடவடிக்கை மேற்கொண்டனர். குண்டு வைத்தது யார் என்பது தெரியவில்லை. சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. (ஐ)

# தீவிரவாதிகள் பத்து பேருக்கு மொரோக்கோவில் மரணதண்டனை

மொரோக்கோவில் கசபலங்கா என்ற இடத்தில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலுடன் தொடர்புள்ளவர்கள் என குற்றஞ்சாட்டப்பட்ட 10 தீவிர இஸ்லாமியர்களுக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

மற்றுமோர் அமைப்பான 'சலாபியாகிதியா' அமைப்பின் 21 அங்கத்தவர்களுக்கு 12மாதம் முதல் ஆயுள தண்டனை வரை சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கடந்த மே மாதம் நடந்த இந்தக் குண்டு வெடிப்பில் 40 பேர் வரை கொல்லப்பட்டிருந்தனர்.

இவர்களின் சட்டத்தரணிகள், நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்ய உள்ளார்கள். "கசபுலங்கா தாக்குதலில் "சலிபா ஜிகாடியா" என்ற அமைப்பு தீவிர பங்கு கொண்டதாக மொரோக்கன் அரசு அறிவித்தது.

# 'எனது மகள்மாரைக் கொன்று விட்டனர்' இரட்டையரின் வளர்ப்புத் தந்தை புலம்பல்!

டுபாய்,ஜூலை13

சிங்கப்பூர் டாக்டர்கள் என் அருமை மகள்களைக் கொன்றுவிட்டனர் என்று தலை ஒட்டிப் பிறந்த ஈரானிய இரட்டையர்களின் வளர்ப்புத் தந்தை கூறியுள்ளார்.

அவர் பெயர் அலிரேசா சபையான். ஈரானில் டாக்டராக இருக்கிறார். அவர் இவ்விருவரையும் தத்தெடுத்து வளர்த்தார். 29 வயதான லேடன், லாலே ஆகிய இரு சகோதரிகளின் ஒட்டிய தலையைப் பிரிக்க சிங்கப்பூரில் நடந்த சிகிச்சை தோல்வி அடைந்ததால் இருவரும் இறந்தனர்.

இதுபற்றி கேள்விப்பட்டதும் ஈரானில் அலிரேசா சபையான் கதறி அழுதார். இந்த சத்திர சிகிச்சை வெற்றிகரமாக இருக்காது என்று பயந்தேன். இருவரையும் பிணமாகத்தான் அனுப்புவார்கள் என்று அவர்கள் என் குழந்தைகளை அழைத்துச்செல்லும் போதே எனக்குத் தெரியும் என்றார் அவர். மற்றவர்கள் அவரை சமாதானப்படுத்தினாலும் அவரால் அழுகையை நிறுத்தமுடியவில்லை.

27 வருடங்களாக லேடனையும், லாலேயையும் வளர்த்தேன் இப்போது என்வீடு வெறிச்சோடிவிட்டது. நானும் ஜேர்மனியில் டாக்டராக இருக்கும் என் சகோதரரும், இந்த சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நடத்தமுடியாது என்று எல்லோரிடமும் சொன்னோம். ஆனால், யாரும் எங்கள் பேச்சை கேட்கவில்லை என்றார் அவர். லேடன், லாலே ஆகியோரது வற்புறுத்தலின் பேரிலேயே இந்த சத்திரசிகிச்சை நடத்தப்பட்டது.

இருவரும் ஏழை விவசாயிக்குப் பிறந்தவர்கள். இவர்களது தந்தை பெயர் ததோல்லா பிஜானி. தெற்கு ஈராக்கில் பிரோசாபாத் என்ற இடத்தில் விவசாயியாக இருக்கிறார்.

தலைஒட்டி பிறந்ததால் 2ஆண்டுகள் மருத்துவமனையில் டாக்டர்கள் கண்காணிப்பிலேயே இருவரும் வளர்ந்தனர்.

1979 ஆம் ஆண்டு ஈரானில் இஸ்லாமியப் புரட்சி நடந்தபோது ஏற்பட்ட குழப்பத்தில் இவ்விரு குழந்தைகளும் காணாமற்போய்விட்டனர். பின்னர் தலைநகர் தெஹ்ரான் அருகே கராஜ் என்ற இடத்தில் இரு குழந்தைகளும் இருப்பதை அறிந்தார் பிஜானி. அக்குழந்தைகளை டாக்டர் சபையான் தத்து எடுத்து வளர்த்து வந்தார்.

தந்தை பிஜானியிடம் இரு குழந்தைகளையும் ஒப்படைக்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பு கூறிய போதிலும், வளர்ப்புத் தந்தையிடமே இருக்க இருவரும் முடிவு செய்ததால், அங்கேயே அவர்கள் வளர்ந்தனர். (ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள், 33 அரால் வீதியில் 3 பரப்பு 0.4குளியில் அமைந்துள்ள வீடு தற்போதுள்ள நிலையில் விற்பனைக்குண்டு. விரும்புவோர் நேரில் பார்வையிட்டு தொடர்பு கொள்ள வேண்டிய சகல விவரங்களுடனும் கூடிய விலையை அறியத்தரவும். Advertiser, 8/1, Carron Place, off Saranankara Road, Dehiwala. (C/28939)

### விற்பனைக்கு

Select II ஸ்கூட்டர் (பிறவுண் நிறம்) விற்பனைக்குண்டு. தொடர்பு: 284, நாவலர் வீதி, (இராசவின் தோட்ட வீதிச் சந்தி) யாழ்ப்பாணம்.(20193)

கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட நல்லின (ஜேர்மன் சப்பேட்) ஆண் நாய் (பிறப்பு அத்தாட்சி பத்திரத்துடன் சகல தடுப்பு ஊசிகளும் போடப்பட்டு) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பாலா, 88/15, பத்திரகாளி கோயில் லேன், கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். T.P. 0777 110131. (20186)

டொயோடா ஹையஸ் வானும் (LH50) ஐந்து சந்திக்கு அருகில் இரண்டு கடைகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 1167, நாச்சிமார் கோயிலடி, K.K.S.வீதி, யாழ்ப்பாணம். T.P. 2223092 (20175)

புதிய இன கலர் மீன்கள், புதிய வடிவமைப்பான தொட்டிகள், மோட்டார்கள், அழகுப் பொருள்கள், குருவிகள், கூடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு 55A, அரசடி வீதி, தட்டார் தெருச் சந்தி, யாழ்ப்பாணம். (20189)

### காணி விற்பனைக்கு

மாரீசன் கூடல்ல் முருகமூர்த்தி கோவிலுக்கு வடக்கே தெருவோரமாக அமைந்துள்ள ஐந்து பரப்புக் காணியும் கட்டடமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.இரத்தினசிங்கம், 3/10,பின்வத்தை றோட், தெகிவளை. T.P. 071 - 2259193. (சி-28917)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலுக்கு அருகில் 11 பரப்புக் காணி கிணற்றுடனும் மற்றும் 10 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு T.P. No. 01-580759 (Mr. நாதன்). (20054)

சொந்தமான தனிப்பாவனையிலுள்ள C 70 மெக்கனிக்ஸ் மொடல் மோட்டார் சைக்கிள், ஏசியா பெண்கள் சைக்கிள், ஒஸ்ரின் 26 ரூர்கியர் பொக்ஸ் என்பவை விற்பனைக்குண்டு. தொடர்பு: தி.இராசரெத்தினம், பத்திரகாளி கோயில் பின்புறம், தாவடி தெற்கு, கொக்குவில். (20196)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima, Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (20044)

புறொயிலர் 1Kg 140/= சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: 1) மான்ஸ் பாடசாலை வீதி, பச் றோட், உடுவில். 2) மீன் சந்தை முன்பாக, சுன்னாகம். (19998)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prime, Broiler குஞ்சுகள் 17.07.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (20042)

பிறிமா, Broiler குஞ்சு விலை குறைக்கப்பட்டுள்ளது. 16.07.2003 இற்கு முன் பதிவுசெய்யவும். தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (20144)

### வகுப்புகள்

Maths O/L பரீட்சையில் நிச்சயம் A,B,C பெறும் முறை புதிய ஆண்டு 6-10வரை), O/L பரீட்சையில் இதுவரையும் பெறுபேறு பாதகர்களுக்கும் ஆரம்பத்தில் இருந்து Paper Class வரை கற்பிக்கப்படும். தொடர்பு: 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (20131)

### மணமகள் தேவை

1970 ஆம் ஆண்டு பிறந்த, யாழ். கிறிஸ்தவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 12 வருடம் ஜேர்மனியில் வசித்து நாடு திரும்பியுள்ள ஆண்டவரை ஏற்றுக்கொண்ட மணமகனுக்கு ஆண்டவரால் இரட்சிக்கப்பட்ட மணமகள் தேவை. படம், குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும். தொடர்பு- விளம்பர இல. 1950, C/o உதயன். (20089)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972இல் பிறந்த, MBBS படித்த, அச்சுவினி நட்சத்திரமும் 8இல் செவ்வாயும், 8 பாவபுள்ளியும் உடைய மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும் வி.இல.1951 C/o உதயன். (20135)

### மணமகன் தேவை

இந்து, அழகான, 37 வயது, மணமகள் இளமைத் தோற்றம், சீதனம் வீடு, பணம், நிலங்கள் பெறுமதி அறுபது லட்சத்துக்கு மேல் சிறந்த நிலையில் சகோதரர்கள். விரும்பும் மணமகன் உத்தியோகத்தர், ஆசிரியர், பிரசித்தமான வியாபார உரிமையாளர். தொடர்பு: 38, புகையிரத வீதி, கிழக்கு ஒழுங்கை, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (20065)

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1970 ஆம் ஆண்டு பூரம் 2ஆம் பாதம் கிரகபாவம் 44, B.Sc. தற்போது பிரபல பாடசாலையில் Computer Instructor ஆக பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். சகல விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 1953, C/o உதயன். (20176)

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, வயது 45, பரணி 4ஆம் பாதம், சிங்கவீட்டு உதயத்துச் செவ்வாய் உடைய, A/L முடித்த மணமகளுக்கு அரசாங்க உத்தியோகம் அல்லது வியாபாரத்திலுள்ள மணமகன் தேவை. விரைவில் விண்ணப்பிக்கவும். செ.விஜயரத்தினம் முருகன திருமண சேவை, ஆனைக்கோட்டை, மூத்த நயினார் கோயிலடி, நவாலி வடக்கு மானிப்பாய். (20149)

### தவறிவிட்டது

நயினாதீவு, 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மு.பரமேஸ்வரன் (ஓவியர்) என்பவர் தனது பொய்க்கால் ஒன்றை 18-11-2001 அன்று தவறவிட்டுள்ளார். இதுபற்றிய விவரம் அறிந்தவர்கள் தயவுசெய்து மேற்கூறிய முகவரியில் தொடர்பு கொள்ளவும். (20153)

பவுண் நகைகளும் காசும் அடங்கிய துணியிலான பேர்ஸ் பருத்தித்துறை, வி.எம். ஒழுங்கைக்கும் கார்த்திகேசர் வீதி வழியாகச் சாரையடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வி.நவரத்தினராசா, "சிவனருள்" பன்னங்கட்டை பருத்தித்துறை, என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ( 20187)

## பருத்தித்துறையில் சமுர்த்தி வங்கி நாளை திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை13

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கான சமுர்த்தி வங்கி நாளை திங்கட்கிழமை பருத்தித்துறையில் திறந்துவைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஏ.சிவகவாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்தத் திறப்பு விழாவில் யாழ். அரச அதிபர் எஸ்.பத்மநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு வங்கியைத் திறந்துவைப்பார்.

இந்நிகழ்வில், யாழ்.செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் என்.சிவபாதசுந்தரம், யாழ்மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ்.மகேஸ்வரகுமார் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-8)

### விற்பனைக்கு

புதிய J.V.C ஜப்பான் V.C.D செற் (3CD)

விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

K.குட்டி
நோத் ஜஸ் இன்டஸ்ரியல்,
இல.34, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

---

யாழ்ப்பாணம்

புதிய விஞ்ஞானக்கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் நடைபெறும்

## அருணகிரிநாதர் விழா - 2003

இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்: இன்று (13.07.2003) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9.30

நிகழ்ச்சிகள்

தலைமையுரை: பிரம்மஸ்ரீ காரை. கு.சிவராஜசர்மா
சிறப்புரை: வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை
சொற்பொழிவு: வாக்கிற்கு அருணகிரி சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்
(உதவிப்பணிப்பாளர், யாழ். இந்துகலாசார அமைச்சு)
இசையரங்கு: திருப்புகழ் காவலூர் S.R. திருஞானசம்பந்தன் (பக்கவாத்திய சகிதம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரம
சைவகலை பண்பாட்டுப் பேரவையினர்.

(சி-28935) (26-14-18-31)

---

## முதலாம் ஆண்டு நினைவு தினம்



தாயின் மடியில் மழலையாய் 12 - 06 - 1988

ஆண்டவன் பாதத்தில் மலராய் 24 - 06 - 2002

### செல்வன் செல்வநாயகம் றஜீந்தன்

திதி: 13.07.2003

ஆசைக்கொரு மகனாய் கல்விக்குச் சிறந்தவனாய் ஒழுக்கத்தில் உயர்ந்தவனாய் தாய்க்கு நல்மகனாய் வந்து உதித்த என் றஜீந்துக்குட்டியே! மாணவர் விடுதியில் அங்கு வந்த காலன் அவன் உன் உயிரைக் கவர்ந்து விட்டான் ஐயா!

தாங்குமோ தாயுள்ளம் உன் உடன் பிறப்புக்களும் அருமை சகோதரத்தைப் பிரிந்து தவிக்கின்றனர். என் கோலமயில் குடியிருந்த வயிறு பற்றி எரிகிறது றஜீந்தா! உன் பூவிழி நோகுமென்று புன்னகையாய்த் தாலாட்டி வளர்த்தேன் நீ - அப்பாவுடன் சென்றுவிட்டாயே! செல்வமே? இன்று உன் பிரிவில் என் விழிகள் இருள் அடர்ந்து விட்டன. கண்ணே றஜீந்தா! அம்மாவைக் கட்டி அணைக்க வாமகனே! என் உயிர் உள்ளவரை காத்திருப்பேன் கண்ணே உன் வரவிற்காக. உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நவாலிறோட், 2ஆம் லேன்,
ஆனைக்கோட்டை.
(20192) (26-14-18-31)

உன்பிரிவால் துயருறும்:
அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

---

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 - 03 - 1944

மறைவு 28 - 06 - 1999

### செல்வி பரமேஸ்வரி செல்லத்துரை

திதி: பூரணை 13.07.2003

அன்பின் திருவுருவாய் அணையா ஒளிவிளக்காய்
பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து
எம்மையும் வாழ வழிகாட்டி மறைந்த தெய்வமே!
ஆண்டுகள் நான்கானாலும் ஆறாது எம்துயர்.

"தாயகம்",
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(20200) (26-18-14-31)

உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அரசகுலசிங்கம் தனலட்சுமி

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கல்வளை, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரசகுலசிங்கம் தனலட்சுமி 11.07.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா-பராசக்தி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற குலோத்துங்கம் - சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அரசகுலசிங்கத்தின் அன்பு மனைவியும் தனபாலசுந்தரன், புலேந்திரன், அரசகுலதேவி, சிவகாமசுந்தரி, கோகிலாதேவி, பாஸ்கரன், புஸ்பகாந்தி, ஜலந்திரன், சத்தியதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகேந்திரன், யோகராஜன், சிறீஸ்கந்தராஜா, குகதாஸ், மகேந்திரன், சரோஜினி, பத்மினி, மாலினி, சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் மைதிலி, பவதாரணி, பார்த்திபன், மயூரதி, மயூரதன், சுகந்தினி, சுகன்யா, வாசுகி, வாசுதன், சுஜந்தா, பிரகலாதன், சுபாசினி, சுதர்ஷன், சுபேந்திரன், விளங்கதன், குன்றில்குமரன், மாயவன், சோபினி, லுக்கினி, யனிரா, மிதுஷன், வேணுஷன், நிரோஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் இந்துஜா, லிஷானி, டெலோன், அதிஸ்டன், சகானா, அருண் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2003) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்வளை,*
*சண்டிலிப்பாய்.* (20120) (25-14-18-31)

தகவல்:
திரு.திருமதி குகதாஸ்

### நாகமுத்து கந்தையா (கந்தராசா)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் தெற்பேலி, மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து கந்தையா (கந்தராசா) 11-07-2003 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும் நாகேந்திரராஜா (இரசாயனக் கூட்டுத்தாபனம்), வனசராணி, மல்லிகாதேவி, பரமேஸ்வரன், சிறிதரன் (மக்கள் வங்கி, கன்னாதிட்டி), கமலநாயகி, வசந்தி, பிரபாகரன், ஆனந்தராஜா, புஸ்பவதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இந்திராணி, நாகேஸ்வரன், கருணானந்தம், திருமதி பரமேஸ்வரன் (மட்டுவில் ம.வி.), திருமதி சிறிதரன் (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), குணசேகரம், அமுதராசா (கனடா), திருமதி பிரபாகரன் (மட்டுவில் கமலாசனி வித்தி.), தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-07-2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு சிவன்கோயிலடி சாவகச்சேரியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன்கோயிலடி,
சாவகச்சேரி. (20207) (19-14-18-31)

தகவல்:
க.சிறிதரன் (மகன்)

### கந்தையா செல்லத்துரை

33/11, இராமநாதன் வீதி, கலட்டி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லத்துரை 09.07.2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தையலம்மாவின் அன்புக் கணவரும் அப்புத்துரை, நாகம்மா, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சேனாதி, தங்கவேலு, தங்கம்மா, செல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் செல்வராணி, அன்னலட்சுமி (காந்தி), கமலநாதன், திருனேஸ்வரி, தவமணிதேவி, கணேஸ்நாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் முருகேசு, ஆறுமுகம், லீலா, மகாலிங்கம், தங்கராசா, மதி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் திலகராணி, ரேவதி (கலா, லண்டன்), ரமணகுமாரி, கீதா, விஜயகுமார் (லண்டன்), விக்னேஸ்வரன் (கண்ணன், பிரான்ஸ்), கேதீஸ்வரன் (கோபி, பிரான்ஸ்), டயானா, பிரதீப், ரதுப்பிரியா, லஷ்சாஜினி, சுபாஜினி, தியாகேஸ்வரி, வனஜா, கிரோக்குமார், மேகலா, டினேசா, தயாளினி (சுவிஸ்), தங்கேஸ்வரன் (ஈசன், லண்டன்), தயாபரன் (ரவி, லண்டன்), தயாளன் (சின்னத்தம்பி), தவனேஸ்வரி (செல்வா, சுவிஸ்), நிவேதா (பிரான்ஸ்), கிறிஷிகா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 (ப.நே.) மணியளவில், அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

33/11, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
(20204) (26-14-18-31)

தகவல்:
கமலநாதன், கணேஸ்நாதன் (பாப்பா)
மகன்மார்

உதயன்

# கல்வித்துறையில் மறுமலர்ச்சி வேண்டும்

ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைவோர் எண்ணிக்கைப்படி பார்த்தால் யாழ்ப்பாணம், நாட்டில் 27ஆவது இடத்தில் இருக்கின்றது என்ற அதிர்ச்சித் தகவலை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் வெளியிட்டிருக்கின்றார்.

நாட்டில் 30 கல்வி மாவட்டங்கள் உள்ளன. இவற்றில் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்திடைவோர் எண்ணிக்கைப்படி இவ்வருடம் யாழ்ப்பாண மாவட்டம் 27ஆவது இடத்தில் இருக்கிறது. கடந்த ஆண்டு அது 28ஆவது இடத்தில் இருந்தது என்றும் பாடசாலை நிகழ்ச்சி ஒன்றில் கல்விப் பணிப்பாளர் கவலைப்பட தெரிவித்திருக்கிறார்.

கல்விப் பணிப்பாளரின் இந்தக் கூற்று யாழ். கல்வியியலாளர்களிடையே அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

பேரழிவை ஏற்படுத்திய போருக்கு மத்தியிலும் தமிழர்கள் தம் அழிவிலாச் சொத்து கல்விதான் என்று இறுமாந்திருந்த காலம் போய் இப்போது அந்தப் பெருமையை இழந்து கூனிக்குறுகி நிற்க வேண்டிய கட்டம் வந்திருப்பது வேதனைக்குரியது; ஆய்வுக் குட்படுத்தப்படவேண்டியது.

தமிழர்களின் கல்விப் பாரம்பரியத்தின் முதுசமாகத் திகழ்ந்தது யாழ்ப்பாணப் பூமி. அங்கேதான் இப்போது இந்த நிலைஎம். தமிழர் தம் அழியாச் சொத்துக்குப் பேராபத்து வந்திருக்கிறது.

தமிழ்ப் பிரதேசங்களின் கல்வி நிலை வீழ்ச்சிக்கு யுத்தமும் அதன் பாதிப்புகளும்தான் அடிப்படைக் காரணங்கள் என்றாலும், கடுமையான போர் நடைபெற்ற காலத்தில் கல்விமீது மாணவர்கள் கொண்டிருந்த பற்றுதலும் உறுதிப்பாடும் இப்போது தளர்ந்து வருகின்றது என்று வேறு சில அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

குப்பிவிளக்கு வெளிச்சத்தில் கற்கவேண்டியிருந்த காலத்தில் யாழ். மாணவர்கள் ஈட்டிய பரீட்சைப் பெறுபேறுகள் முழு நாட்டையுமே வியப்பில் ஆழ்த்தி வந்தன. ஆனால், போரும் அதன் நெருக்குவாரங்களும் தணிந்துள்ள இன்றைய காலகட்டத்தில் யாழ். மாணவர்களின் பரீட்சை சாதனைகள் திருப்திகரமாக இல்லை.

மாணவர்கள் மத்தியில் இன்று தீவிரமாகப் பழக்கப்பட்டுவரும் தேவையற்ற பொழுதுபோக்குகள் கல்வி மீதான நாட்டம் குன்றுவதற்கு ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. அதுவும், ஒரு தாக்கக் காரணியாக இருக்கின்ற போதிலும் சரியாகத் திட்டமிடப்படாத கல்வித் திட்டங்களும், பட்டங்களுக்காகக் கற்பது என்ற வெறும் புத்தகக் கல்வியும் மற்றும் நாட்டின் கல்வி நிர்வாகத்தில் விஞ்சி நிற்கும் ஒழுங்கீனங்களும்கூட கல்வித் தரத்தின் வீழ்ச்சிக்குக் காரணங்களாக உள்ளன.

யுத்த அழிவுகளில் சிக்கித் தவிக்கும் தமிழ்ப் பிரதேசங்களின் கல்வித்துறையைச் சீர்செய்வதற்கு அரசாங்கங்களிலோ அல்லது அதன் கல்வி நிர்வாகக் கட்டமைப்பிலோ தங்கி நிற்பது எந்தப் பலனையும் தரப்போவதில்லை. மாறாக, தமிழர்களின் கல்விக்கு தனித்துவமான கட்டமைப்பு ஒன்று அந்த மண்ணில் இருந்தே கட்டியமைக்கப்படவேண்டும்.

ஏற்கனவே இந்தப் பத்தியில் குறிப்பிட்டதுபோன்று வீழ்ச்சியடைந்துவரும் தமிழ்ப் பிரதேச, கல்வியைச் சீர்செய்வதற்கு வேண்டிய தனித்துவமான தேவைகளை அடையாளம் காணவும், ஓர் ஒழுங்கு முறையில் அமைந்த திட்டங்களைத் தயாரிக்கவும் அவற்றைச் செயற்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் ஒழுங்குபடுத்தி வழிநடத்தவும் சுயாதீனமான கல்விக் கட்டமைப்பு அவசியமாகின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

அழியாச் சொத்து என்று தமிழர்கள் பெருமைப்பட்டு பேணிவரும் கல்வியைத் தொடர்ந்தும் அழியாச் சொத்தாக வைத்திருக்க வேண்டுமாயின் அதற்கு மேற்கண்ட நடவடிக்கைகள் அவசரமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இன்றைய நமது கல்விப் பெருமையை - பாரம்பரியத்தை - அடுத்த தலைமுறைக்கும் கையளிப்பதை உறுதிப்படுத்துவது நம் ஒவ்வொருவரினதும் பொறுப்பும் கடமையும் என உணர்வோம்.

கல்வித் துறையைச் சீர்செய்வதற்கும் தனித்துவமான கல்விக் கட்டமைப்பு ஒன்றை வழிநடத்தவும் பல்கலைக்கழகமும் கல்விசார் நிறுவனங்களும் கல்வி மேம்பாட்டுப் பேரவை போன்றை அமைப்புகளும் ஒருமித்து பணியாற்ற முன்வரவேண்டும்.

போராடிப் போராடிப் பாதுகாத்த கல்விச் சொத்தை மெருகூட்டி மெருகூட்டி தக்கவைக்க ஒன்றிணைந்து போராடுவோம்.

# தீவக ஆசிரிய ஆலோசகர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவுரை

தீவகக் கல்வி வலயத்தில் கடமையாற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் அனைவரும் பாடசாலை தரிசிப்பின் பொழுது முழுநேரமும் குறித்த பாடசாலைகளில் பணியில் இருக்கவேண்டும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபால் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேவையற்ற விதத்தில் பாடசாலையின் நிர்வாக விடயங்களில் தலையிடுவதை ஆசிரிய ஆலோசகர்கள் தவிர்த்துக்கொள்ளுதல் நன்று.

அதேவேளை, பாடசாலைகளுக்கு மேற்பார்வை மற்றும் ஆலோசனைகளுக்குச் செல்பவர்கள் அங்குள்ள வரவுப் பதிவேட்டில் தமது வரவை உறுதிசெய்து கொள்ளவேண்டும். உள்வரும், வெளிச்செல்லும் நேரங்களைச் சரியாகப் பதிவு செய்துகொள்ளவேண்டும் - என்றார்.

இதேவேளை, தீவக வலயத்துக்கு உட்பட்ட சில பாடசாலைகளில் சில பாடத்துறைகளுக்கு வருடத்தில் ஒருமுறைகூட ஆசிரிய ஆலோசகர்கள் செல்வதில்லை என்பது கண்டறியப்பட்டிருப்பதாகவும் - இதனையடுத்து ஆசிரிய ஆலோசகர்களின் பணிகள் தொடர்பாக இறுக்கமான நடைமுறைகள் அதில் செய்யப்படவுள்ளன என்றும் - வலயக் கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-4-88)

## நாட்டு நடப்பு

### விளங்காத விலாசம்

விலாசத்தை எழுத்தில் வாங்கி
விசுவப்பர் வீடு தேடலானார்
பலரிடம் துண்டைக் காட்டி
படித்து வீட்டைக் காட்டும் என்றார்
விலாசத்தை படித்தோர்க் கெல்லாம்
விளங்கிட முடியவில்லை
பலவகை மருந்து விற்கும்
பாமஸி தனை நண்ணி
கலக்கத்தோடு துண்டைக் காட்டி
காட்டுவீரோ வீட்டை என்றார்
நலம்பெறு மருந்தின் பேர் இது
நான் வாசித்து அறிந்தேன் என்று
கலங்கிய விசுவப்பர் கையில்
காசுக்கு மருந்து தந்தான்.

- விகடகவி.

# ஆசிரியர் சங்கக் கூட்டத்துக்கு முன்மொழிவு அனுப்ப கோரிக்கை

அச்சுவேலி,ஜுலை13

இலங்கை ஆசிரியர் சேவை நிலையியல் குழுவின் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கான ஆலோசனைகள், முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் வெளியிட்டுள்ள அறிக்கையில்:-

இலங்கை ஆசிரியர் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முதற்றடவையாக ஆசிரியர் சேவை நிலையியற் குழுவின் கூட்டம் கடந்த ஜுன் மாதம் 23ஆம் திகதி கூட்டப்பட்டது.

கல்வி அமைச்சர் தலைமையில் கூடிய நிலையியற் குழுக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் உட்பட ஆறு ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அமைச்சின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜுன் மாதம் 23ஆம் திகதி நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இறுதித் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படாமல் இந்த மாதம் 22ஆம் திகதிக்குக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறும் ஆசிரியர் சேவை நிலையியற் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடைய தீர்மானங்கள், முன்மொழிவுகளை ஆசிரியர் சங்கத்தின் கொழும்பு அல்லது திருகோணமலை முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# யாழ்.நாக விகாரையில் இன்று அலங்காரப் பவனி

யாழ்ப்பாணம்,ஜுலை13

நயினாதீவு ஸ்ரீ நாகவிகாரையின் புனித அலங்காரப் பவனியை முன்னிட்டு, இன்று யாழ். நகரில் ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள பௌத்த விகாரையிலிருந்து 'அலங்காரப் பவனி' மாலை 7மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நயினாதீவு ஸ்ரீ நாகவிகாரை மற்றும் யாழ். பௌத்த விகாரை ஆகியவற்றின் விகாராதிபதிகள் மற்றும் பல பிரமுகர்களும் இந்நிகழ்வில் பங்குபற்றவுள்ளனர். இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கென கொழும்பிலிருந்து நடனக் கலைஞர்கள், வாத்தியக் குழுவினர் மற்றும் பல நிகழ்ச்சிக்குரிய கலைஞர்கள் யாழ். வந்துள்ளனர்.

இதில் அலங்கரிக்கப்பட்ட ஒரு யானையும் பங்குபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பவனியின் இறுதியில் பக்தி கீதங்கள், நடன நிகழ்ச்சிகள், விசேட பூசைகள் என்பன இடம்பெறவுள்ளன.

ஸ்ரான்லி வீதியிலிருந்து ஆரம்பமாகவுள்ள இவ்வலங்காரப் பவனி கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி, பலாலி வீதி ஊடாகச் சென்று திரும்பவும் யாழ். விகாரையை வந்தடையவுள்ளது. (எ-4)

### நாளை

ஆனி 29
திங்கட்கிழமை
14.07.2003
திதி : பிரதமை
முன்னிரவு 10.19 வரை
நட்சத்திரம்; உத்தராடம்
பின்னிரவு 12.34 வரை
சுபநேரம் : 12.00-1.30
ராகுகாலம் : 7.30-9.00
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

வாலிபப் பருவம் தவறுகள் நிறைந்தது. நடுத்தர வயது கஷ்டங்கள் நிறைந்தது. வயோதிப் பருவம் மன்னிப்புகள் நிறைந்தது.

# பண்ணையில் தவம் கிடக்கும் 28 நல்லினப் பசுமாடுகள்

அச்சுவேலி,ஜுலை13

பொலன்னறுவை கால்நடைப் பண்ணையில் இருந்து யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்ட 28 நல்லினப்பசு மாடுகள் எவருக்கும் வழங்கப்படாமல் திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் காத்துக்கிடக்கின்றன.

- இவ்வாறு கொண்டு வரப்பட்டுள்ள சினைப்படுத்தப்பட்ட பசுமாடுகளில் இரண்டு மாடுகள் கன்று ஈன்று உள்ளன என்றும் - மேலும், சில மாடுகள் கன்று ஈனும் நிலையில் உள்ளன என்றும் - அறியப்படுகின்றது.

28 நல்லினப்பசு மாடுகளையும் எந்த அடிப்படையில் யாருக்கு வழங்குவது என்பது தொடர்பான இறுதித்தீர்மானம் எடுக்கப்படாததை அடுத்தே மாடுகள் காத்துக்கிடப்பதாகக் கூறப்பட்டது.

கன்று ஈனுவதற்குரிய காலப்பகுதியில் உரிய முறையில் பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டிய மாடுகள் பொருத்தமான கவனிப்பின்றி பொதுப்பராமரிப்பில் இருப்பதால் மிகவிரைவில் தொற்றுநோய் தாக்கத்திற்கு உள்ளாகி உயிரிழந்து போகக் கூடிய நிலை ஏற்படலாம் என்றும் அஞ்சப்படுகின்றது. (எ-11)

உற்சவத்துக்கு வரும் பக்தர்களின் நலன்கருதி

# மாவை ஆலயம் அருகே நிறுவப்பட்ட கடைகளில் பணம், பொருள்கள் சூறை!

வலி.வடக்கு,ஜுலை13

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் அடியார்களின் நலன்கருதி அமைக்கப்பட்ட இரண்டு கடைகளும் உடைக்கப்பட்டு பணம், பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

கடந்த 4ஆம் திகதி கொடியேற்ற தினத்தைத் தொடர்ந்து உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள ஆலய வீதியில் கோயில் நிர்வாகத்தினாலும் மற்றும் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினாலும் ஆரம்பிக்கப்பட்ட கடைகளிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் ஆலய உற்சவம் முடிவடைந்து அனைவரும் வெளியேறிய பின்னர் திருட்டு இடம்பெற்றுள்ளதாகக் கூறப்பட்டது.

மேற்படி திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இராணுவ உயர் பீடத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் - உரியவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகப் பொதுமக்கள் பல்வேறு ஊகங்களைத் தெரிவித்துள்ளனர். (எ-86)

# சிறுவர் உரிமைகள்

- உயிர் வாழும் உரிமை
- பெயரும் தேசியமும் பூணும் உரிமை
- பெற்றோரை அறியவும் அவர்களின் பராமரிப்பை பெறுவதற்குமான உரிமை
- விருப்பத்திற்கு மாறாக பெற்றோரிடமிருந்து பிரிக்கப்படாமை
- சிந்தனை, மனசாட்சி, சமயம் ஆகிய சுதந்திரம்
- கூடும் சுதந்திரம்
- அந்தரங்கத்திற்கான உரிமை
- கல்வி பெறும் உரிமை
- ஓய்வு, பொழுதுபோக்கு, கலாசார நடவடிக்கைகளுக்கான உரிமை
- பொருளாதார ஏமாற்றத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான உரிமை
- பாலியல் இம்சையிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை
- கடின உழைப்பிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை
- சித்திரவதை, குரூர மிருகத்தனமான அல்லது இழிவுபடுத்தும் விதமாக நடத்தப்படுவதிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை
- நியாயமான விசாரணை பெறும் உரிமை
- சுதந்திரம், பாதுகாப்பு ஆகியவற்றுக்கான உரிமை

இவை மறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:

District Child Protection Committee
Room No.30
General (Teaching) Hospital,
Jaffna.
(021) 222 5657

(சி-28922)(24-14-18)

## வெளிநாட்டு அழைப்பு குறைந்த கட்டணத்தில்

காரியாலயங்கள், வீடுகளில் இருந்து CHA CALLING CARDமூலம் துல்லியமாக உங்கள் அழைப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

(300/- 37 நிமி.) (500/- 62 நிமி.) (1000/-125 நிமி.)

கனனி உள்ளவர்களுக்கு 2.70 மட்டும் (ஒரு நிமிடத்துக்கு)

NET PHONE CARD 83/-

GO₂ CALL CARD 90/-

விவரங்களுக்கு:

**WINTO COMMUNICATION**

No.6, Morden Market, Jaffna.

021-222 6315 0777-631865 - 365452 (20191) (24-19-15)


## பேச்சுப் போட்டி நடத்த ஏற்பாடு

அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் யாழ் மாவட்ட பாடசாலை மாணவர் மத்தியில் பேச்சுப் போட்டியை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, உயர்பிரிவு என நான்கு பிரிவுகளாக நடத்தப்படவுள்ள பேச்சுப் போட்டிக்கான விண்ணப்ப இறுதித் தினம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை ஆகும். சர்வதேச கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு சங்கத்தின் கல்வி, அபிவிருத்திப் பிரிவு போட்டிகளுக்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது. (எ-11)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### உயர்திரு. ஆறு.திருமுருகன்

அவர்கள் யாழ். கல்வியியற் கல்லூரியால் "சிவநெறித்தவமகன" என்ற பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டமை கண்டு பேருவகை கொள்வதோடு, மேன்மேலும் அவர்பணி சிறக்க மனமார வாழ்த்துகின்றோம்.

இந்துமாமன்றம்,

மானிப்பாய். (20164)(24-15-19) யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.


## வடக்கு - கிழக்கு மாகாண சபை

### வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் [நிகொட்]

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

"ஆஅவ" கடன்இல.1846 SRI (SF)

# கேள்வி கோரல் - இல.06

# குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்து தொழில்தருனராக குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக வவுனியா மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்ராட்பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | VA/NECORD/RD/03 | கல்குண்டாமடுவ- அலகல்ல வீதி (1.820km) புனர்நிர்மாணம் | M7 | 37,000.00 |
| 02. | VA/NECORD/ED/10 | சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்தில் (110'x25') வகுப்பறைக்கட்டடம் நிர்மாணம் | M8 | 15,000.00 |
| 03. | VA/NECORD/ED/13 | மன்னகுளம் அ.த.க.பாடசாலையில் (110'x25') வகுப்பறைக்கட்டடம் நிர்மாணம் | M8 | 15,000.00 |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   - I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD)விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக ("இக்ராட"டுடன் மேற்படி M7இற்கு பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.
   - III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்ததன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன் கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படவேண்டும்.
   - IV. "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
   - V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   - VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.
4. பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்விகோர முடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம் NECORD, வவுனியாவில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 024-22589, பக்ஸ்: 024-22590, ஈமெயில்: necordva @sltnet.lk.
6. ஒப்பந்த ஆவணங்களை ஜூலை 10 இலிருந்து ஜூலை 24, 2003 வரை முற்பகல் 9.30இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து ரூபா 1000/- மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யப்படலாம்.
7. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று இதன் NECORD அலுவலகத்தில் ஜூலை 22 முற்பகல் 10.00மணிக்கு நடைபெறும்.
8. கேள்வி கோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்கவேண்டும்.
9. அந்தந்த வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணை முறிகளுடன் பொறிவைத்த கேள்விகள், தலைவர், மாவட்ட கேள்விச் சபை, NECORD மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, வவுனியாவிற்கு ஜூலை 29,2003 பிற்பகல் 3.00மணிக்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்பட வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

**க.கணேஷ்**

தலைவர்,

மாவட்ட கேள்விச்சபை/அரசாங்க அதிபர்,

வவுனியா மாவட்டம். (சி-289112) (19-24-15)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### பட்டப்பின் படிப்புகள் பீடம்

### ஈராண்டுப் பகுதிநேரப் பட்டப்பின் கல்வித்தகைமைக் கற்கைநெறி - 2003/2005

யாழ்ப்பாணம் - வவுனியா வளாகம்

## புதிய அனுமதி

மேற்படி கற்கைநெறி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளன. அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 2003.08.15இல் 50வயதுக்கு குறைந்தவர்களாக இருத்தல்வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப்படிவங்களை பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் பெற்றுக்கொள்ளலாம். தபால்மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 50/=இற்கான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் முத்திரை ஒட்டப்பட்ட, சுயமுகவரியிடப்பட்ட தபால் உறையினையும் "பீடாதிபதி, பட்டப்பின் படிப்புகள் பீடம், யாழ். பல்கலைக்கழகம்" எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 2003.08.15 (வெள்ளிக்கிழமை)**

**எழுத்துத் தேர்வுத் திகதி: 2003.09.13 (சனிக்கிழமை)**

எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு இரண்டினதும் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

கற்கைநெறிக்குத் தெரிவுசெய்யப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கான விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்திலிருந்து 25மைல் சுற்றாடலுக்குள் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு, இக்கற்கை நெறிக்குப் பதிவுசெய்யும்போது மேற்குறிப்பிட்ட இடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் யாவும் 2003-08-15ஆம் திகதிக்கு முன்னர் பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இக்குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இக்கற்கைநெறிக்கான கட்டண விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**பதிவாளர்,**

**யாழ்.பல்கலைக்கழகம்.**

10-07-2003. (சி-28913) (26-24-19)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னம்மா பஞ்சலிங்கம்

*(இளைப்பாறிய ஆசிரியை, யா/குரும்பசிட்டி பொன் பரமானந்தா வித்தியாலயம், யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்)*

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா பஞ்சலிங்கம் 11.07.2003 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் பஞ்சலிங்கத்தின் அன்பு மனைவியும் மாலா, சுயாதா(கனடா), ஆகியோரின் பாசமிகு தாயாரும் உருத்திரபாலன்(சுவீஸ்), சுதர்சன் (கனடா) ஆகியோரின் மாமியாரும் மதீசன், விதுன்(கனடா),விதுஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் திருமதி இராசம்மா சேனாதிராஜா, திருமதி யோகம்மா இராமகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.07.2003) சனிக்கிழமை நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*உரும்பிராய் தெற்கு.*
(20183) (15-24-19)

## கதிரவேலு சர்வேஸ்வரன் (ராசம்)

தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சர்வேஸ்வரன் (ராசம்) கடந்த 09.07.2003 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பத்மலீலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கதிரவேலு - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் சொர்ணம்மாவின் மருமகனும் நகுலேஸ்வரனின் (ஸ்ரீ - கனடா) சகோதரனும் தர்ஷினா (கனடா), துஷாந்தி (கனடா), கஜேந்திரன் (கனடா), சுஜந்தன் ஆகியோரின் தந்தையும் பத்மநாதன் (கனடா), பத்மராணி (நீர்கொழும்பு), பத்மஜோதி (ஜேர்மனி), பத்மலோஜினி (ஜேர்மனி), பத்மரோகினி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் கிருபாகரன், சுரேஸ்குமார் ஆகியோரின் மாமனாரும் கிரிஷாந், கிரிஷோத் ஆகியோரின் பேரனும் பேரின்பநாயகம், சத்தியமூர்த்தி, சிவநாதன், தனிகாசேகரம் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (13.07.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச.பத்மலீலா (மனைவி), பிள்ளைகள்.

*மானிப்பாய் வீதி,*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.* (சி-28924) (24-19-15)

## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும். கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 - 222 - 2567

(21-14-18-26) (குறிப்பு:- சத்திரச் சந்திக்கு அண்மை) (சி-28665)

## கண்ணீர் அஞ்சலி



09.07.2003 அன்று இறைபதமடைந்த
எமது ஆருயிர் நண்பர்
ச.சுஜந்தனின் (சுந்தா)
அன்புத் தந்தையாரான
**கதிரவேலு சர்வேஸ்வரன்** (ராசம்)
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

-தாவடியூர் நண்பர்கள்.

மானிப்பாய் வீதி,
தாவடி. (சி-28925) (21-14-18-26)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 - 05 - 1937



மறைவு 25 - 06 - 2002

### அமரர் பொன்னர் கந்தசாமி

(சுகாதாரத் திணைக்கள முன்னாள் உத்தியோகத்தர்)
திதி: பூரணை 13.07.2003

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
என்றும் எங்கள் நினைவில் வாழும்
எம் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

- குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:
வசாவிளான் தெற்கு.
வசாவிளான்.

தற்காலிக முகவரி:
சிவன் வீதி. உரும்பிராய் கிழக்கு.
உரும்பிராய்.

(சி-28908)(21-26-14-18)

## முதல் முறையாக அறிமுகமாகிறது




# ClimaX
# கிளைமெக்ஸ்

- ClimaX இல் இயற்கையான அனைத்து விட்டமின்களும் அடங்கியுள்ளன.
- ClimaX உடலுக்கு அதிசக்தியைத் தரக்கூடியது.
- ClimaX இல் உடலுக்கு உற்சாகம் சுறுசுறுப்பு, ஞாபகசக்தி போன்றவற்றை தரக்கூடிய அற்புதமான பதார்த்தம் அடங்கியுள்ளது.

பாவனைமுறை:- தினந்தோறும் இரவில் ஒரு கெப்சியூல் வீதம் தொடர்ந்து பாவித்து சிறந்த பயனைப் பெறலாம்.

யாழ்.முகவர்:-
**ஜெகன் பார்மஸி**
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/28742) (28-16-1719-14-24)

வன்னி முகவர்:-
**அகிலன்ஸ் பார்மஸி,**
[பிள்ளையார் மருந்தகம்]
கிளிநொச்சி.

## அதிபோஷாக்கு மிக்க உன்னத பானம்

ப்ரோவினெக்ஸ் இல் 16 வகையான விற்றமின்களும் மேலதிக கனியுப்புக்களும் அடங்கியுள்ளன.

# PROVIN-X

- இழந்த சக்தியை விரைவாக மீட்டெடுத்தல்
- நோய்வாய்ப்பட்டோர் உடன் புத்துணர்வு பெற
- கண்பார்வை சக்தியை அதிகரித்தல்




மேலும் விளையாட்டு வீரர், கர்ப்பிணித்தாய்மார் வரையும் பிள்ளைகள், வயோதிபர் உட்பட முழுக்குடும்பத்துக்கும் ஏற்ற சிறந்த பானம்



*யாழ். முகவர்:* ஜெகன் பார்மஸி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 3191
*வன்னி முகவர்:* அகிலன்ஸ் பார்மஸி
(பிள்ளையார் மருந்தகம்), கிளிநொச்சி.

*இலங்கையில் சந்தைப்படுத்துவோர்:*
**ARKEM COLOMBO**
T.P.: 470290, 075 344436
E-mail: arkem@sltnet.lk

**PROVIN - X** தற்போது அனைத்து முன்னணி பார்மஸிகளிலும் பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
(சி-28738) (14-18)



## உங்கள் திருமணச் செலவில் பெரும் பகுதியை நாம் ஏற்போம்..

### பெயாரரோஸ் சுப மாங்கல்யம்

உங்கள் திருமணத்தை வெகு விமரிசையாக நிகழ்த்த பெயாரோஸ் விரும்புகிறது. உங்களுக்கு பிடித்த விதத்தில், பிடித்த இடத்தில் திருமணத்தை நடத்தலாம். ஆனால் இந்த வருடத்தில் நடக்க வேண்டும் என்பதே எமது ஒரே வேண்டுகோள்.

- மணப்பெண்ணின் புடவை • தங்கச் சங்கிலி • பாதணிகள்
- தோழியர் இருவரின் புடவைகள் • ஆபரணங்கள் • பாதணிகள்
- முக அலங்காரம் • தலையலங்கார ஆலோசனைகள்
- மலர் அலங்காரம் • மணமேடை அலங்காரம்
- மேசை அலங்காரம் • திருமண கேக்
- திருமண ஸ்ரக்சர் கேக் • திருமண அழைப்பிதழ்/கேக் பெட்டிகள்
- புகைப்படங்கள்/வீடியோ படங்கள்
- 150 பேருக்கான விருந்துபசாரத்துடனான மண்டபச் செலவுகள்

இவை அனைத்தையும் வழங்க நாம் தயாராக உள்ளோம்.

ஆறுதல் பரிசாக 10 தங்க நாணயங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்
உங்கள் வருங்கால துணைவருக்கும் உங்களுக்கும் இடையில் நடந்த மறக்க முடியாத சம்பவத்தை சுவைபட எழுதி, இருவரும் சேர்ந்து அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிட்டு 25கி அல்லது 50கி பெயாரோஸ் வெற்று உறையுடன் இணைத்து இன்றே எமக்கு அனுப்பி வையுங்கள்.

பெயாரோஸ் சுப மாங்கல்யம், ஹேமாஸ் மார்க்கட்டிங் (பிரைவட்) லிமிடட்,
36, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01.

முடிவுத் திகதி 2003 ஆகஸ்ட் 31.



# FairRose
**Fairness Cream**
With Rosewater & Sandalwood Paste




அழகுக்கலை ஆலோசனைகளை வழங்கும் அனுசரணையாளர்கள்
**Salon Nayana**

மென்மையான சருமத்திற்கு
வெண்மையான முகத்திற்கு

Licence No.: C/29/2003



காலம் காலமாக
இளம் சருமம் பெற
கிரீம், லோஷன்
உபயோகியுங்கள், இல்லையேல்
மெடிமிக்ஸில் குளியுங்கள்.

காலங்காலமாய் சருமத்தை
இளமையாக, பொலிவாக,
ஆரோக்கியமாக
வைத்திருப்பதற்கான இரகசியம்
ஆயுர்வேதத்திலுள்ளது.
இதே ஃபார்முலா மெடிமிக்ஸ்
ஆயுர்வேதிக் சோப்பில் உள்ளது.
இது 18 சக்திவாய்ந்த மூலிகைகள்
மற்றும் தேங்காய் எண்ணெயின்
நற்குணங்கள் நிறைந்த,
கைகளால் தயாரிக்கப்பட்ட
ஒப்பற்ற கலவையாகும்.
மெடிமிக்ஸில் குளியுங்கள்,
உங்கள் சருமம், முகப்பரு, மாசு,
வெயில், சோர்வு
போன்றவையை எதிர்க்கும்,
அதோடு காலம் காலமாய் நீடித்த
பொலிவைத் தரும்.



மெடிமிக்ஸ் ஆயுர்வேதிக் சோப்
சருமத்தை இளமையாக
வைத்திருக்கும் என்றென்றும்

www.cholayil.com
CHOLAYIL


## யா/பாலாவோடை இ.த.க. பாடசாலை பழைய மாணவர் சங்கம் நடத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

வெற்றி பெற்ற இலக்கங்கள்:

முதலாம் பரிசு: 8161
இரண்டாம் பரிசு: 3267
மூன்றாம் பரிசு: 7560
ஆறுதற் பரிசுகள்: 1570, 4883, 4061, 9466, 3274.

பரிசுக்குரியவர்கள் 31-07-2003இற்கு முன்னர் தமது பரிசுகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- பழைய மாணவர் சங்கம்
யா/பாலாவோடை இ.த.க. பாடசாலை, காரைநகர்.

(20167) (26-24-15-19)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொடிகாமம் உசன்,
மிருசுவிலைச் சேர்ந்த
உயர்திரு.
**கிரகோரி சவரிமுத்து**

அவர்கள் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக நீதிபதி திரு.பா.சுப்பிரமணியம் அவர்களின் முன்னிலையில் 11.07.2003 அன்று சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது சேவை மேலும் தொடர ஆண்டவனை வேண்டுகின்றோம்.

- மிருசுவில் பங்கு மக்கள்.

(சி-28139) (25-24-15-19)

## பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்



சிறந்த சமூக சேவையாளரும்
வேணி களஞ்சியம், வேணி ரான்ஸ்போட்,
கோவில் ரான்ஸ்போட் என்பனவற்றின்
உரிமையாளரும் எமது அன்புக்கும்
மதிப்புக்குமுரிய
சிவதர்ம வள்ளல்
**திரு. குமாரசாமி கங்கைவேணியன்**

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாகப் பதவியேற்றுள்ளார். இவர் பெற்றுள்ள இந்தப் பதவியானது உண்மையாக உழைக்கின்ற பரந்த நோக்கமுள்ள இவரது சேவைக்கு இன்னும் வலுச் சேர்ப்பதாகுக என்று இவரைப் பாராட்டி உளமார வாழ்த்தி மகிழ்கின்றோம். உரிமையாளர்: து.குருநாதசிவம் குடும்பத்தினர்

சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-28119) (19-24-15)


# உங்கள் வாழ்வையும் ஒளிமயமாக்கிட....

வடக்கு கிழக்கு மக்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு

**Polycrome®**
ELECTRICAL ACCESSORIES




நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மின் ஆழி அல்லது சொக்கட்டுடனும் ஒரு பொலிக்ரோம் சங்க்பெட்டி இலவசம்

உங்கள் அருகிலுள்ள விநியோகஸ்தரை இன்றே நாடுங்கள்

சர்வதேச தரத்திற்கமைய உருவாக்கப்பட்ட ஃபேடியோ மின் ஆழிகளுடன் சொக்கட்கள்

எங்களிடம்
- MCB என்க்ளோஷர்கள்
- 5 AMP, 13 AMP, 15 AMP பிளக் டொப்கள்
- லாம்ப் ஹோல்டர்ஸ், விட்டொ ஹோல்டர்ஸ், சீலிங் ரோஸ், சுவிட்ச்கள் பொருத்தும் பெட்டிகள், அழைப்பு மணிகள், என்பவையும் உண்டு

விநியோகஸ்தர்: எஸ்ஜே இலக்ட்ரிகல்ஸ்
இல. 9, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தோ.பே : 021-2222564

**பொலிக்ரோம் இலக்ட்ரிகல் இன்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடட்**
333/9, பழைய கெஸ்பாவ வீதி,
ரத்தனபிட்டிய,
பொரலஸ்கமுவ.

உயர் தரம்மிக்க மின் உபகரண உற்பத்திகளுக்கு பொலிக்ரோம்


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**13.07.2003**
வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த
திரு.திருமதி
பாக்கியநாதன் - அனுஷா
தம்பதிகளின் செல்வப் புதல்வி

**ரிதிலா**

தனது முதலாவது
பிறந்த தினத்தை இன்று
(13.07.03) ஞாயிற்றுக்கிழமை
மிகவும் குதூகலமாகத்
தனது இல்லத்தில் கொண்டாடி
மகிழ்கின்றாள்.

வாழ்த்துவோர்:
குடும்பத்தினரும்,
நண்பர்களும்.

"ஸ்ரீபதி", வதிரி,
கரவெட்டி.

(20008) (24-15-19)


## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

யாழ்ப்பாணத்தில் 15.07.2003 -22.07.2003 வரை



இளைஞர்களே!
சக்தி குறைவு - ஞாபக மறதி - பயம் - நடுக்கம் - நித்திரைக் குறைவு இவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலை வேண்டாம்.
உடனே என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்!
ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

தொடர்புகொள்ளவும்:
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
Govt. Regd. No. 9492
HOT LINE: 0777 569205
T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்).

(சி-28906) (24-15-19)

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | சூ. சந். சனி |
| செ. | இராசிச் சக்கரம் | | வியா. புதன் |
| | | | |
| சந். | கே. | | |

# இந்த வார இராசி பலன்

## 13-07-2003 - 19-07-2003

### மாற்றம்:

பூராடம் - தனுசு இராசியில் சந்திரன் நிற்கும்.

அரசியல் பேச்சில் மாறிமாறி கருத்துக்கள் பரிமாற்றம் தொடர வழி பிறக்கும். தெற்கில் அபிப்பிராய பேதங்கள் வளரும். இந்தியாவின் செல்வாக்கு மெல்ல மெல்ல வளரும். வடக்கில் வன்செயல் தொடரும். மேற்கு நாட்டுப் படை வலு, மத்திய கிழக்கில் அதிகரிக்கும், விட்டுவிட்டு எதிர்ப்புணர்வு ஏற்பட்டபடி இருக்கும். இந்து சமுத்திரத்தில் இயற்கையின் சீற்றம் அதிகரிக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

மனிதர்கள் பிராணிகளுக்கும பட்சிகளுக்கும் தீமை செய்யக் கூடாது. அதனால், அவர்கள் சந்ததிக் குறைவு விருத்தியின்மை ஏற்பட்டு வருந்துவர். தொழில்பீடத்தில் சக ஊழியர்களுக்கு தீமை செய்தாலும் இப்படிப் பலன் வரும் . இந்த வாரம் தொழில்ஸ்தானத்தில் போட்டிகள் ஏற்படும். உங்கள் சொத்துக்களில் சிலர் காலூன்ற திட்டமிடுவார்கள். வருமானம் குறையும். இடமாற்றங்களால் நஷ்டம், ஏமாற்றந்தான். தவிர்க்கவும். கால்மூட்டு வலி, திடீர் கோபம் வரும். வியாபாரிகளுக்கும் மருந்து விற்பனையாளர்களுக்கும், காவல்துறையினர்களுக்கும் மாற்றங்கள், விட்டு விட்டு பணவரவுகளும் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வெள்ளி, சனி.*

### இடபம்

எந்தத் தொழிலிலும் போட்டி, பொறாமையால் நேர்மையானவர்கள் பாதிக்கப்படுவது இயல்பாகும். உங்கள் தொழிலிடத்தில் உங்கள் மீது பொறாமையால் வீண்பழி சுமத்துவார்கள். பணவரவு குறையும். நண்பர்கள் ஏமாறுவர். எதிலும் நிதாமின்றி அலட்சியப்படுத்துவதனால் எதிர்ப்புக்கள் வரும். சிலருக்கு அடிபிடி காயங்கள் கூடவர இடம் உண்டு. மாணவர்கள் படிப்பில் ஆசையிருக்காது. தூரதேசச் செய்தி சிலருக்குப் பிரயாண வாய்ப்பு ஏற்பட இடமுண்டு. ஈரல் பிரச்சினை, உஷ்ண பீடைகள் கொடுக்கும். அரசியல்வாதிகள், சட்டத்துறையினர் அதிக இலாபங்கள் அடைவார்கள். கண் வருத்தம் சிலரை வருத்த இடம் உண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்:- வெள்ளி, சனி.*

### மிதுனம்

எவர் என்ன தத்துவத்தைப் பேசினாலும் பணமின்றி வாழ்க்கை ஓடுமா? தொழில் ஸ்தானத்தில் சாதுரியமாகப் பேசிக் கருமமாற்றுவீர்கள். உறவினர்கள் வந்து கொண்டாடுவார்கள். நண்பர்கள் உதவுவார்கள். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பு ஏற்படும். சங்கீதப் பிரியர், ரீ.வி, வீடியோ எனச் செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். இடமாற்றங்கள், பிரயாணங்களால் அதிக நன்மை அடைவார்கள். செய்தியாளர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். ஆசிரியர்களுக்குப் புதிய பொறுப்பு வரும். பணக் கொடுக்கல் வாங்கல்களைத் தவிர்த்துக் கொள்ளவும். மலச்சிக்கல், களைப்பு, சலிப்பு வரும். ஓய்வு அடிக்கடி எடுக்கவும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வெள்ளி, சனி.*

### கடகம்

பிரச்சினைகள் ஒரு தொடர் கதை. கூட்டினால்தான் அரசியல் வெற்றிகரமாக நடத்தமுடியும். தொழில்ஸ்தானத்தில் பிரச்சினைகள் கூடினால் மனத்துன்பம், பயம்தான் மிஞ்சும். மாணவர்கள் புதிய கல்வியால் நன்மை அடைவர். திடீர் பிரயாணம் சிலருக்கு நன்மைகள் கொடுக்கும். விபத்துக்கள் வரலாம். வாகனங்களால் செலவுகள் அடிக்கடி வரும். உங்களைப் பற்றி தவறாகச் சிலர் வீண் வதந்திகளைப் பரப்புவார்கள். தந்தையாருக்கு உடல் நிலை நல்லதல்ல. நெஞ்சு நோ, வாய்வுத் தொல்லை வரும். இடமாற்றங்கள் சகஜம். அரசியல்துறை, குருத்துறையினருக்கு அதிக நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வெள்ளி, சனி.*

### சிங்கம்

புத்தியுள்ளவர்கள் பலவான்கள் அந்தக் காலத்தில். இந்தக் காலத்தில் வெளிநாட்டுப் பணம் உள்ளவர்கள்தான் பலசாலிகள். பணம் பல விஷயங்களைச் செய்யுமல்லவா? தொழில் ஸ்தானத்தில் பணத்தால் புதிய திட்டம் போடுவீர்கள். கவர்ச்சிக்காக பொருள் செலவுகள் அதிகரிக்கும். கற்பனைகள் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பு கொடுக்கும். பொதுத் தொண்டு, வாக்கால் காரியமாற்றுவீர்கள். இனஜனங்கள் வருகை, தூரதேச யோசனை என்பன கொடுக்கும். உஷ்ண வருத்தம், கண் நோ வரும். வியாபாரிகள் அதிகமான நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், சனி.*

### கன்னி

என்னையா? மொட்டையாக எடுத்தெறிகின்றீர்கள் என்று சிலர் கருதுகின்றார்கள். செல்வாக்குள்ளவர்கள் ஆட்கொல்வதனால் யாருக்கு இலாபம்? யாருக்கு நஷ்டம் என்பதைச் சிலர் புரியாமல் பேசுகின்றார்கள். உங்கள் தொழில் ஸ்தானத்தில் உறுதியான செயற்பாடு, புதிய வெற்றிகள் கொடுக்கும். பழைமை தேடி ஓடுதல், சச்சரவு ஏற்படும். புதிய பொறுப்புகள் வரும். இடமாற்றம், எதிர்ப்பாலர்கள் உதவுவர். கைகால் பிடிப்பு, பித்த ரோகம் கொடுக்கும். ரீ.வி., டெக் தரகு வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வெள்ளி, சனி.*

### துலாம்

உறுதியான செயலூக்கம் கொண்டு வீட்டிற்கும், நாட்டிற்கும் நல்லதைச் செய்வீர்கள். தொழில் ஸ்தானத்தில் எல்லோருக்கும் உதவுவார்கள். பொருள் களவு அல்லது இழப்பைக் கொடுக்கலாம். வெறுப்புகள் குடல் வருத்தங்கள் நரம்பு வியாதிகள் வரும். மாணவர்களுக்கு எதிர்ப்புகள் வலுப்பெறும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். வாய்வுத் தொல்லை, நாரி உளைவு, கால் பிடிப்பு கொடுக்கும். பொருள் செலவு அதிகரிக்கும். பாதுகாப்புத்துறை, சட்டத்துறையினர் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வெள்ளி.*

### விருச்சிகம்

கல்வியில் பிடிவாதம் பிடித்தால் வெற்றி வரும். தொழில் நிலை மாற்றம் கொடுக்கும். சாப்பாட்டில் கட்டுப்பாடு செய்யுங்கள். இனஜன வருகை. தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்பு, நன்மைகள், மேலதிகாரிகள் வாழ்த்துவர். இடமாற்றங்கள் கொடுக்கும். குடும்பத்தில் சிறப்பு. அயலவர்கள் உதவி செய்வார்கள். பித்த ரோகம், தலையிடி காட்டும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வெள்ளி.*

### தனுசு

எமது கிரகநிலைகளுக்கு ஏற்ப பலன்கள் எமது வாழ்வில் தொடரும். திசாபுத்தி வழிநடத்தும். இதை அனுசரித்து நாம் தெய்வ வழிபாடு செய்துவந்தால் நாம் ஓரளவு துன்பத்திலிருந்து தப்பிவிடலாம். தொழில் ஸ்தானத்தில் வரும் எதிர்ப்புகளை புத்திசாதுரியமாகச் சமாளிப்பீர்கள். இடமாற்றம் ஏற்படும். பொருள் வரவு கொடுக்கும். குடும்பத்தினருக்கு நன்மைகள் நடக்கும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். மருந்து வியாபாரிகள், ஆசிரியத்தொழில் செய்பவர்கள், மாணவர்கள் பல நன்மைகளை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வெள்ளி.*

### மகரம்

நீங்கள் மெதுவாக அசைந்து, அசைந்து கருமமாற்றுவதனால் பல சந்தர்ப்பங்களை இழந்துவிடுவீர்கள். தொழில்ஸ்தானத்தில் மாற்றம். ஊக்கத்தைப் பொறுத்து பணவரவு கொடுக்கும். பொருள் இழப்பு ஏற்பட இட முண்டு. வியாழன் - புதன் பார்ப்பதனால் ஓரளவு தாக்கம் குறையப் பெரியவர்களின் உதவிகள் இருக்கும். தூர தேசத்திலிருந்து நற்செய்திகள் வர இடமுண்டு. மனக்குழப்பம், கால், நரம்பு வருத்தம், மூட்டுநோ வரலாம். பிரயாணத்துறை, குருத்துறை, கடல் வேலை செய்பவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி.*

### கும்பம்

மனித நம்பிக்கை, தெய்வ பக்தி, எமது கடமையின் நிறைவு என்பன படிப்படியாக உயர்வுகளைக் கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் பிறரின் அன்பு உங்களுக்கு உற்சாகத்தைத் தரும். குடும்பத்தினரின் கல்விக்காக பொருள் செலவுகள் அதிகரிக்கும். இடமாற்றங்கள் சகஜம். கால் வருத்தம், நெஞ்சுப் படபடப்பு, உஷ்ண வியாதிகள், மூட்டுவலி என்பன கொடுக்கும். புதிய பொறுப்புப்பொன்றால் ஓடியாடித் திரிந்து செயலாக்குவீர்கள். எதிரிகளையறிந்து முறியடிப்பீர்கள். ஆசிரியத் தொழில், வியாபாரத்துறையினர் போன்றவர்களுக்கு மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்:- சனி.*

### மீனம்

முயற்சியால் உயர்ச்சி அடைவீர்கள். தொழில் சிறப்பு ஏற்படும். குடும்பத்தினர்களுக்கு பல மாற்றங்கள் ஏற்படும். இடமாற்றம் நன்மை தரும். பொருள வரவு அதிகரிக்கும். தொழில் ரீதியான புதிய திட்டங்கள் உருவாகும். இனஜனக் கொண்டாட்டங்கள் இருக்கும். புதிய பொருள் வரவு ஏற்படும். கெட்டவர்களால் மறைமுகத் துன்பங்கள் வரலாம். தெய்வவழிபாடு, புதியவர்களால் உதவிகள் கிடைக்கும். சனி பிடிக்கும். சலவருத்தம் துன்பம் தரும். படிப்படியாக பொருள் வரவு ஏற்படும். மருந்துத்துறை, கடல்துறை, குருத்துறை, தொழில்நுட்பத் துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

---

## காணி உறுதி கண்டெடுப்பு

வரணி,ஜூலை13

கோரண்டாவிலைச் சேர்ந்த நமசிவாயம் ஜெயதேவி என்பவரின் காணி உறுதி ஒன்று வரணி தென்னிந்திய திருச்சபையின் வண.பிதா நேவிலரூபராஜினால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உறுதிக்கு உரியவர் நேரில் வந்து அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-10-170)

## பிறப்பு, இறப்பு பதிவுகள் வேறு இடத்தில்

கொழும்புத்துறை,ஜூலை13

யாழ்.நகர் கிழக்குப் பகுதி மக்களுக்கான பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் தற்பொழுது அரியாலை, பூங்கங்குளம் சந்தியில் உள்ள சிவசக்தி வைத்திய நிலையத்தின் வைத்தியர் சு.விக்கினேஸ்வரனால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பதிவுகள் இதுவரை காலமும் ஈச்சமோட்டை ஆனந்தா வைத்திய நிலைய வைத்தியரால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. (எ-10-30)

## ஏழு பாடசாலைகளில் தீவகத்தில் சத்துணவு

ஊர்காவற்றுறை,ஜூலை13

தீவகக்கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஆண்டு ஒன்றில் கல்விகற்கும் மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

தீவக கல்வி வலயத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இத் திட்டத்திற்கு எழுவைதீவு றோ.க. த.கலவன் பாடசாலை, அனலைதீவு தெற்கு அ.த. கலவன் பாடசாலை, சின்னமடு றோ.க. தமிழ்கலவன் பாடசாலை, நயினாதீவு நாகபூசணி வித்தியாலயம் உட்பட ஏழு பாடசாலைகளில் இந்தச் சத்துணவு வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-16)

---

நாகர்கோவில் பகுதியிலுள்ள மக்கள்

# வளலாய், கொட்டோடை கிராமங்களில் மீளக்குடியமர படையினர் அனுமதி மறுப்பு

## செய்தியாளர் மாநாட்டில் அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பணம்,ஜூலை13

பருத்தித்துறை, நாகர்கோவில் பகுதியில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்துவரும் 80 குடும்பங்களையும் வளலாய் மற்றும் வடமராட்சி கொட்டோடை (ராஜன் நகர்) போன்ற பகுதிகளில் குடியமர்த்துவதற்கு யாழ்.செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டபோதிலும் படையினர் அதற்கு அனுமதி வழங்க மறுத்துள்ளனர்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்றிட்டங்கள் தொடர்பாக விளக்கம் அளிப்பதற்காக நேற்றுமுன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாகர்கோவில் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் வசித்துவரும் இடங்கள் குடியிருப்புக்குத் தகுதியற்ற இடங்களாகும். மழை பெய்தால் அங்கு வெள்ளம் தேங்கி நிற்கும். அப்போது அவர்கள் அங்கிருந்து குடிபெயர வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

அவர்களின் அந்த அவல நிலையினை நேரில் சென்று பார்த்தோம். அங்கிருக்கும் 80 குடும்பங்களையும் வளலாய், ராஜன் நகர் பகுதிகளில் குடியமர்த்துவதற்கு திட்டமிட்டு அதற்கான அனுமதியை படைத் தரப்பிடம் கோரினோம். ஆனால், அவர்கள் அதற்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டனர்.

குடாநாட்டில் தற்பொழுதும் 2 ஆயிரத்து 124 குடும்பத்தினர் அகதி முகாம்களிலேயே தங்கியிருக்கின்றனர்.

19 ஆயிரத்து 324 குடும்பங்கள் அகதி முகாம்களுக்கு வெளியே உறவினர்கள், தெரிந்தவர்களின் வீடுகள், காணிகளில் தங்கியுள்ளனர்.

அகதிமுகாம்கள் பெரும்பாலும் தனியாருக்கு சொந்தமான காணிகளிலேயே அமைந்திருப்பதால் அங்கு நிரந்தர கட்டடங்கள் மற்றும் மலசல கூட வசதிகள் என்பவற்றை செய்து கொடுக்க முடியாத நிலை உள்ளது.

இவற்றை விட இன்னமும் 28 ஆயிரம் குடும்பங்கள் இங்கிருந்து இடம்பெயர்ந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, புத்தளம் போன்ற மாவட்டங்களில் தங்கியிருக்கின்றன.

அவர்களை இங்கு வலிந்து அழைக்க முடியாத நிலை உள்ளது. ஏனெனில், இங்கு மக்களின் குடியிருப்பு பகுதிகள் பல படையினரின் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாடு முற்றாக படையினரின் வசம் வந்த பிற்பாடு மீளக்குடியமர்ந்த மக்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபா வீதம் மீள்குடியமர்வு கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தது. புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படுகின்றது. இதற்கு புனர்வாழ்வு அமைச்சு 32 மில்லியன் ரூபா நிதியை வழங்கியுள்ளது. ஏனைய தொகையை உலக வங்கி வழங்கச் சம்மதித்தது.

தமது சொந்தக் காணிகளில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கே இந்த கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. வங்கிகள் மூலமே இந்தக் கொடுப்பனவுகள் நடைபெறுகின்றன.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் சுமார் 44 ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. இக்குடும்பங்களில் தமது வாழ்விடங்கள் முற்றாக சிதைக்கப்பட்டவர்களுக்கு அவற்றை அமைப்பதற்காக தலா 75 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. ஆனால், அது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதேவேளை, 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் குடாநாட்டில் 4 கிராமங்களில் முதற்கட்டமாக 528 வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன. நாவாந்துறை சூரியவெளி, குருநகர், மருதங்கேணி, சாவகச்சேரி பிரதேங்களில் உள்ள 4 கிராமங்களே, இவற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இக்கிராமங்கள் ஒவ்வொன்றிலும் தலா 132 வீடுகள் வீதம் அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொரு வீட்டுக்கும் 75 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது -

என்று அவர் தெரிவித்தார்.

(எ-4)

---

## அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜூலை13

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமித் தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் யாழ்.வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெறும். (எ)

## தளபாடக் கொள்வனவுக்கு நிதியுதவி

தென்மராட்சி,ஜூலை13

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்துக்கான தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கென யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.கஜேந்திரகுமார் ஒரு லட்சம் ரூபாவினை பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து வழங்கியுள்ளார். (எ-117)

## அனலைதீவு தெற்கு நன்னீர்க்குளம் புனரமைப்பு

ஊர்காவற்றுறை,ஜூலை13

அனலைதீவு தெற்கு நன்னீர்க்குளம் தற்பொழுது உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

இக்குளத்தின் புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டு வரும் பொதுமக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 20 வருடங்களுக்கு பிறகு தற்சமயம் இக்குளம் ஆழமாக்கப்படுவதுடன் அதிக அளவு நன்னீரைத் தேக்கி வைக்கக் கூடிய முறையில் குளத்தின் அணைக்கட்டுகள் உயர்த்தப்பட்டு வருவதாகவும் அனலைதீவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பரத்துவாசன் தெரிவித்தார். (எ-16)




. வைத்தியர்களால் பரிசோதிக்கப்பட்டு உத்தரவாதம் பெறப்பட்டது

- 100% மூலிகைகளால் ஆனது. மற்றும் பக்கவிளைவுகள் அற்றது.
- துரித வேகத்தில். மறுமாற்றத்தைத் தரக்கூடிய மூலிகை கிறீம்.
- பாவனையின் பின் சர்மம் மீண்டும் புதுப் பொலிவை அடைகிறது.

யாழ் நகரில் சகல பாமஸிகளிலும் கிடைக்கப் பெறும்.

வழங்குவோர்: ஜெகன் பாமஸி, இல.462-டீ ஆஸ்பத்திரி தெரு,
யாழ்ப்பாணம். தொ. பேசி: 021-2222194 / 2223191


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 26 - 07 - 1982



அழிப்பு 13 - 07 - 2000

### அமரர் சோமசுந்தரம் சஞ்சீவன்


(யாழ்.இந்துக்கல்லூரி மாணவன், உயர்தர கணிதப் பிரிவு - 2001)

மறைந்தும் மறையாத
மனங்களிலே மலர்ந்திருக்கும்
நின்நினைவுகள் ஆண்டுகள் ~ பல
சென்றாலும் மீளாத் துயரே!

முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை. (20117) (21-15-14) - குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 - 06 - 1941



மறைவு 13 - 07 - 2002

### அமரர் கந்தையா இராஜரட்ணம் (மாமா)

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறுமோ உங்கள் நினைவலைகள்
ஆறாது எம் சோகம் மாறாது
உங்கள் நினைவுகள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (20117) (21-15-14) மருமக்கள்.



## சகல தரப்பினருக்கும் ஆங்கிலம்...

சர்வதேச தரத்திற்கேற்ப நவீன கற்பித்தல்
உபகரணங்களுடன் ஆங்கில மொழி மூலம்
பாலர் பாடசாலை வகுப்புக்கள்
நடாத்தப்படுகின்றன.

கிழமை நாட்களில் திங்கள் முதல் வெள்ளி வரை

- Play Group (Kids from 2+ to 3+ Years of Age)
- Montessori School (Kids from 3+ to 4+ Years of Age)
- Pre - School (Kids from 4+ to 5+ Years of Age)

MONTESSORI & EARLY LEARNING CENTRE IN THE ENGLISH MEDIUM



உங்கள் பிள்ளை
5+ முதல் 14+ வயதாயின்
விசேட தனித்துவமான ஆங்கில பாடநெறிகள்

LEVELS
4 Upper Intermediate
3 Intermediate
2 Lower Intermediate
1 Foundation

EACH LEVEL 6 MONTHS

ENGLISH
ஆங்கிலம்

வளர்ந்தோர் சரளமாக
ஆங்கிலம் பேசுவதற்காக
பேச்சுத்திறனை குறிக்கோளாகக் கொண்ட ஆங்கில
பாடநெறிகள்

Certificate in English | Diploma in English | Advanced Diploma in English

வெளிநாடு செல்வோருக்கான
விசேட பாடநெறிகள்

SPECIALISED ENGLISH COURSES

IELTS
INTERNATIONAL ENGLISH LANGUAGE TESTING SYSTEM

TOEFL
TEST OF ENGLISH AS A FOREIGN LANGUAGE

British BUSINESS SCHOOL
Where Students Come First

# BRITISH BUSINESS SCHOOL

JAFFNA CITY CAMPUS : 140, Temple Road, Jaffna.
JAFFNA KACHCHERI CAMPUS : 174, Kandy Road, Jaffna.
NALLUR CAMPUS : 174/16, Temple Road, Jaffna.
PHONE : 021 222 5796



வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கவிஞர் சிவகவிமணி கதிர்காமத்தம்பி எழுதிய 'திருவிளையாடற் பூசைப் பாமலர்கள்' என்ற நூலின் வெளியீட்டு விழா அண்மையில் தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது.

நூலாசிரியர் கதிர்காமத்தம்பி தம்பதியினர் இந்துகலாசார அமைச்சுக்கென ஒரு தொகுதி நூல்களை அமைச்சர் தி.மகேஸ்வரன், உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் ஆகியோரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (எ)

# யேசுவின் வார்த்தைகள் எமது வாழ்வாக வேண்டும்!

உலக ஜீவராசிகளின் பிறப்பு எவ்வளவு உண்மையானதோ அதேயளவு உண்மை அவற்றின் இறப்புமாகும். அதாவது, எல்லா உயிரினமும மரணத்தை ஒருநாள் சந்திக்கத்தான் வேண்டும்.

இந்த மரணம் எங்கள் எல்லோருடைய வாழ்விலும் பற்பல விளைவுகளை, எடுத்தெறிய முடியாத சுமைகளை, ஆற்ற முடியாத வடுக்களைத தந்துவிட்டிருக்கின்றது. நிச்சயமாக மரணம் எங்களையும் ஒருநாள் தொடத்தான் போகின்றது. இந்த மரணம் பற்றி இன்று சிந்திப்போம். மரணத்துடன் எல்லாம் முடிகின்றதா?

## ஞாயிறு நற்பிரசாதம்

சாதாரண மரணங்கள் கூட சட்டப்படி உறுதிப்படுத்தப்பட வேண்டிய காலம் மலையேற அசாதாரண மரணங்கள் சர்வசாதாரணமாகிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு விடிவிலும் பல உயிரற்ற உடல்களைச் சுமந்து கொண்டு விடிகின்றது. நல்லடக்கம் செய்யப்படாது நலிவுற்ற பல பிணங்களின் வாடை இந்த மண்ணில் காற்றாகி வீசிக்கொண்டிருக்கின்றது. மனிதனுக்கு மனிதன் மரண சாசனம் எழுதிக் கொண்டிருக்கின்றான்.

ஆதாமும் ஏவாளும் பிரசவித்துத் தந்துவிட்ட இந்த மரணம் இன்று தனது குழந்தைகளை மனுக்குலத்தின் மத்தியில் ஈன்று கொண்டிருக்கின்றது. போர் என்ற போர்வையில் மரணம் தனது கைங்கரியங்களைக் காட்டிக் கொண்டிருக்கின்றது. இந்த மரணம் நோயாகி, குண்டாகி, காற்றாகி, காசாகி, ஊகிக்க முடியாத பொருளாகி மனிதனை முத்தமிடுகின்றது. இந்த மரண அழுத்தம் மனுக்குலத்தின் ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கும் இறுதி முத்தம்.

ஆனால், இந்த முத்தம் இறுதி முத்தமாக அன்றி, வாழ்விற்குச் செல்லும் ஆரம்பத் தழுவலாக அமைவது யேசுவுக்கு யூதாஸ் கொடுத்த மரண முத்தத்தால், ஆம், மரணம் மனித வாழ்வில் மறைக்க முடியாத மாறாத கேள்வியாக இருந்தது. யேசு அதன் முழுமையான விடையானார். சாவில் வாழ்வு மாறுபடுவதே அன்றி அழிக்கப்படுவதில்லை. அந்த மாறும் வாழ்வை முழுவதுமாக அங்கீகரித்துக் கொள்ள யேசு வழியாக வேண்டும். அவர் வார்த்தை எம் வாழ்வில் வாழ்வாக வேண்டும்.

**எஸ்.ரஞ்சன்**

ஆகவே, மரணத்தை வென்ற மானுடங்கள் யேசுவைப் பின்பற்றி அவரின் உதவியுடன் உலக சலனத்தையும் சாத்தானின் கொடூரத்தையும் வென்று யேசுவோடு நித்திய வாழ்வில் நுழைவோம். ★

# மதுபாவனையின் விளைவாகும் சிறுவர் துஷ்பிரயோகங்கள்

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் அண்மைக்கால புள்ளிவிபரங்களின்படி மதுபாவனையின் ஒரு பிரதிவிளைவாக சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுகின்றதா என்ற கேள்வியை ஏற்படுத்துகின்றது. ஏனெனில், பாதிப்புக்குள்ளாகும் பிள்ளைகளின் பெற்றோர்களைப் பொறுத்தவரையில் 98 வீதத்திற்கு மேலானோர் மதுபாவனைப் பழக்கமுடையவர்களாகவும் மனைவி மற்றும் பிள்ளைகளைத் துன்புறுத்துகின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். அத்துடன், கணவன் - மனைவி இடையேயான முரண்பாடுகள் சிறுவர்களின உரிமைகளையும் நிம்மதிகளையும் சீர்குலைக்குகின்றது. இதனால், உடல், உள ரீதியில் பாதிப்புக்குள்ளாகி சமூகத்தில் வெகுவாக ஒதுக்கப்படுகின்றனர். இதனை நாம் நன்கு உணர்ந்த நிலையில் இக்கட்டுரையை இங்கு தருகின்றோம்.

குறிப்பாக, பெற்றோர்களினதும் மூத்த குடும்ப உறுப்பினர்களினதும் மதுபாவனைப் பழக்கத்தினால் அவர்களின் நடிபங்கு (Role Play) குடும்பத்தில் வெகுவாகக் குறைந்து காணப்படுகின்றது. பெண்கள் மற்றும் பிள்ளைகள் மீதான அடக்கு முறைகள் இங்கு சாதாரண நடைமுறைச் செயற்பாடுகளாகின்றன. இதனால், பெரும்பாலும் குடும்பப் பொறுப்பைப் பெண்கள் சுமந்து கொள்வதுடன் அதிக சுமை, மன அழுத்தம் போன்ற காரணங்களால் பிள்ளைகள்மீது கடுமையான போக்கைக் கடைப்பிடிக்கத் தூண்டப்படுகின்றனர். இதனைக் குடும்ப அலகில் பெற்றோரிடையே சம பங்கீட்டுச செயற்பாடு அற்ற நிலையில் வெளிப்பாடாக நோக்க முடியும். இதனால், சிறுவர்கள் இலக்குகளற்ற நிலைக்குத் தள்ளப்படுவதுடன் பிழையான வழிமுறைகளை நாடவும் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

கடந்த காலத்தில் கசிப்பு உற்பத்திக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற விசாரணைகளும் தீர்ப்புகளும் ஓர் உண்மையை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. குறைந்த செலவில் தற்காலிக உச்ச பயனை அனுபவிக்க ஒரு பகுதி மக்கள் கூட்டம் வளர்ந்து வருகின்றது. அத்தோடு, சட்டத்தின் மூலம் சமூக செயற்பாட்டை ஒரு சீர் நிலைக்குக் கொண்டுவர சிலர் முற்பட்டாலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் பலர் நடந்துகொள்கின்ற அணுகுமுறை நேர்மையற்றதாக இருப்பதனால் குற்றவாளிகளும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றனர். உத்தரவுபெற்ற மதுச்சாலைகளும், கள்ளுத தவறணைகளும் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கின்ற போதும், கடந்த சில வருடங்களுக்குள் சட்டத்துக்குப் புறம்பாக உற்பத்தி செய்யப்படுகின்ற கசிப்பு சமூகத்தின் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்திருக்கின்றது. இது மக்களின் அறியாமை நிலையையே கோடிட்டுக் காட்டுகின்றது. எனவே பல்வேறு மட்டத்தில் - வழிகளில் - மக்களுக்குச் சேவையாற்றிவரும் சமூக சேவை அமைப்பினர் மேற்படி விடயத்தில் அதிக கவனம் எடுப்பது ஆரோக்கியமான நிலையைத் தோற்றுவிக்குமென நாம் கருதுகின்றோம்.

> "...புகைத்தல் , மது மற்றும் போதைப்பொருள்களுடன் சிறுவர்களைக் கையாளவிடுவதும் சிறுவர் துஷ்பிரயோகமென வரையறுக்கலாம்..."

*அத்துடன்,* மதுபாவனை தொடர்பாக எமக்குக் கிடைத்துவரும் முறைப்பாடுகளில் பல திடுக்கிடும் செய்திகள் அடங்குகின்றன. அவற்றை ஏதோ ஒரு வகையில் சமூகத்திற்கு தெளிவுபடுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டிய கடப்பாடு மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினராகிய எமக்கு நிச்சயமுண்டு.

எனவே, பெற்றோர், ஆசிரியர்கள், மதத்தலைவர்கள், சமூகசேவை உறுப்பினர்கள் இதனை ஆழமாகக் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டுமென நாம் உணர்கின்றோம். கடந்த சில வருடங்களுக்குள் கஞ்சா, அபின், ஹெரோயின் போன்ற பல்வேறு போதைப் பொருள் பாவனையும் அதனுடன் தொடர்புடைய விபச்சார நடவடிக்கைகளும் இளம் வயதினர் மத்தியில் ஊடுருவி வந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதிவேகமாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் அறிமுகமாகி வருவதனால் இது எவ்வாறு எமது சமுதாயத்தில் உள்வாங்கப்படுகின்றது என்பதை நாம் உன்னிப்பாக ஆராய வேண்டியவர்களாக இருப்பதுடன், இது யாரால் கொண்டு வரப்படுகின்றது என்பதனையும் அறியவேண்டிய கடப்பாடு எமக்குண்டு. அத்தோடு, அதற்கு எதிராகச செயற்பட்டு சமூக ஒழுங்கை நிலைநாட்ட முன்வரவேண்டும். புகைப்பிடித்தல், மதுபாவனை, போதைப்பொருள் பாவனை என்பன ஏதோ ஒரு வகையில் ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையில் ஒருவரைச் சென்றடைகிறது. அதனைத் தொட்டுப்பார்த்த ஒருவர் அதற்கு அடிமையாக்கப்படும் சூழல் மிக ஆபத்தானது என்பதை எமது சமூகம் உணரும் வரை எமது சமுதாயத்தை நன்நிலைப்படுத்த முடியாது என நாம் கருதுகின்றோம். எனவே, ஒரு சமுதாயத்தின் மிக முக்கியமான சமூக அலகாகிய 'குடும்பம்' நிலை பெற்றிருக்க வேண்டும். குடும்பம் தனது விழுமியத்தை இழக்கும் பட்சத்தில் அங்கத்தவர்களின் உரிமைகளைக் கட்டிக் காக்க முடியாது. இதற்குப் பெற்றோரே முழுப்பொறுப்பும் உத்தரவாதமும் உடையவர்களாக இருக்கின்றனர். பெற்றோர் தமது கடமையினின்று தவறாது குடும்ப அலகைச் சீராகக் கொண்டு நடத்த வேண்டும். மதுபாவனையானது குடும்ப சூழலை விழுமியம் மற்றும் நியமங்களுடன் இலக்கை நோக்கி நகர்த்துவதற்கு எந்த வகையிலும் உதவப் போவதில்லை.

பெற்றோரின் மது, போதைப் பொருள் பாவனைப் பழக்கம் சிறுவர்களின் உரிமைகளைச் சீர்குலைக்குமானால் பிள்ளைகள் அதனை உணர்ந்து எமக்கு அறிவிக்கும் அல்லது நாம் கண்டறியும் பட்சத்தில் சட்டத்தின் முன் அவர்கள் நிறுத்தப் படுவார்கள்.

எனவே -

மதுபாவனை துஷ்பிரயோகம் -
போதைப்பொருள் பாவனை -
சட்டவிரோத கசிப்பு உற்பத்தி-
போதைப்பொருள் கடத்தல் -
சமூக சீரழிவு நடவடிக்கைகள்-


இவை உங்கள் சமூகத்திலுள்ள 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களை அல்லது சிறுவர்களாகிய உங்களை எந்தவகையிலும் பாதிப்படையச் செய்யுமானால் உடனே எம்முடன் தொடர்பினை ஏற்படுத்தவும்.

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை இல: 30,
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5657

## குடாநாட்டில் அதிகரிப்பது ஆய்வுகள் மூலம் அவதானிப்பு

# நூல் வரிசை



**நூல்:** *வித்தும் விழுதும். தமிழினம் அன்றுமுதல் இன்றுவரை*
**ஆசிரியர்:** *ம. கங்காதரம்*

உங்கள் கைகளில் தவழும் இந்நூல், பல்துறை சார்ந்த விடயங்களைப் பேசுகின்றது. புவியியல், வரலாறு, மானிடவியல், சமூகவியல், அரசியல், மொழியியல், பண்பாடு, தமிழ், இலக்கியம், மதநம்பிக்கைகள் என்று அவற்றை நீட்டிக்கொண்டே போகலாம். பல்துறை சார்ந்த விடயங்களை ஒன்றிணைத்துத் தமிழர் சமுதாயத்தின் உயர்வு நிலையைக் கருதி அதனை வளம்படுத்தும், வலுப்படுத்தும் முயற்சியின் ஒரு வெளிப்பாடாக இந்நூல் அமைந்துள்ளது.

குமரிக்கண்டம் உண்மையா? மாந்தனினத்தின் தோற்றம், மொழியின் தோற்றமும் வளர்ச்சியும், நாகரிகத்தின் தோற்றம், புலப்பெயர்வு, உலக மொழிகள், ஆரியர் வருகை, தமிழர் பண்பாட்டின் பரம்பல், முச்சங்கம்: சான்றுகள் உண்டா? தளர்வுறும் தமிழினம், முயல்வோம், உயர்வோம் என்ற தலைப்புகளில் ஆசிரியர் தாம் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகப் பாடுபட்டுத் திரட்டிய பல்துறை சார்ந்த ஆதாரங்களைக் கொண்டு தமது கருத்தை வலுப்படுத்திச் செல்கின்றார். அத்துடன், பிற்சேர்க்கையாக ஜப்பானிய தமிழ்ச் சொற்கள்: ஒலி பொருள் ஒற்றுமை, வேதத்தில் உள்ள தமிழ்ச் சொற்கள், இலத்தின், கிரேக்கம், ஆங்கிலம் ஆகியவற்றில் உள்ள தமிழ்ச் சொற்களின் பட்டியல் என்பனவும் இணைக்கப்பட்டுள்ளன. அவரது அனைத்துக் கட்டுரைகளிலும் ஆசிரியரின் பரந்துபட்ட அறிவு, அனுபவமுதிர்ச்சி பளிச்சிடுகின்றது.

ஆசிரியர் ஆரியமயப்படுத்தலின் விளைவாகத் தமிழினத்தின் தோற்றம், மொழிச்சிறப்பு, நாகரிகம் முதலியன நீண்டகாலமாகத் திட்டமிட்டு மறைக்கப்பட்டு வந்துள்ளன என்றும், இந்நிலை இன்றும் தொடர்கின்றது என்றும் கருத்துத் தெரிவிக்கின்றார். நம் தலைமுறையினர் தாம் வந்த வழி பற்றிச் செவ்வையாக அறிந்து தமது பண்டைச் சிறப்புக்கு இசைவாகத் தம் இனமேம்பாட்டில் நாட்டங்கொள்ளத் தூண்டுவதே இச்சிறு நூலின் குறிக்கோள் என்று குறிப்பிடுகின்றார். இப்பின்னணியில் தமிழின் மேம்பாடு, மொழிப்பற்று, தன்மானம், மற்றவர்களின் கருத்திற்கு மதிப்பளித்தல் என்பனவற்றை வற்புறுத்துகின்றார். உலகமயமாதல் முழு உலகையும் விழுங்கி வரும் இக்காலத்தில் நூலாசிரியரின் கருத்துக்களை உள்வாங்கிக் கொள்வது நல்லது.

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,* **போராசிரியர் ச.சத்தியசீலன்**
*திருநெல்வேலி.* *வரலாற்றுத்துறை.*



**நூல்:** *உலக இசைகளுக்குத் தமிழ் இசையின் பங்களிப்பு*
**ஆசிரியர்:** *பேராசிரியர் எஸ்.கே. சிவபாலன்*

இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பகுப்பாய் விளங்குவது முத்தமிழ். இவற்றுள் அறிவிற்கு விருந்தாய் அமைவது இயற்றமிழ்; அறிவுக்கும் செவிக்கும் விருந்தாய் அமைவது இசைத்தமிழ்; அறிவுக்கும் செவிக்கும், விழிக்கும் விருந்தாய் அமைவது நாடகத் தமிழ். இம்முத்தமிழில் இசைத் தமிழைப் பற்றி அண்ணாமலைப் பல்கலைக்கழக நுண்கலைப் புலத்தில் பணியாற்றும் பேராசிரியர் எஸ்.கே.சிவபாலன் அவர்கள், "உலக இசைகளுக்குத் தமிழ் இசையின் பங்களிப்பு" என்ற பெயரில் அரிய ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதியுள்ளார். இந்நூல் பன்னிரெண்டு தலைப்புகளைக் கொண்டுள்ளது.

தமிழ் இசையின் வளர்ச்சி தொல்காப்பியக் காலத்திலிருந்து தொடங்குகின்றது. எனினும், இதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே இவ்விசை சிறப்புற்றிருந்தது எனவும் கருதலாம். இசை நீண்டு ஒலிக்கும் தன்மையை, சொல்லும் இசையும் தன்மையை அதாவது, பாடலின் ஒலி நீள்வது, இசை நீட்டமாகக் கருதப்படுவதையும், அளபெடை எழுத்துகளுக்கும் இசைக்கும் இடையே உள்ள தொடர்பினையும் தொல்காப்பியர்,


"அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும் உளவென மொழிப
இசையொடு சிவணிய நரம்பின் மறைய என்மனார் புலவர்"
(தொல். எழுத். 33)

என்று கூறியுள்ளார்.

நூலாசிரியர் உலக இசைகளுக்கெல்லாம் தாய் இசையாக விளங்குவது தமிழ் இசை என்பதைக் தக்க எடுத்துக்காட்டுகளுடன் இந்நூலில் எடுத்துக்காட்டி, தமிழ் இசையின் சிறப்புக்களை விளக்கியுள்ள பாங்கு, மிகவும் போற்றத்தக்கதாகும்.

தமிழிலக்கியங்கள், சரிகமபதநி என்னும் ஏழு சுரங்களுக்கு குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற காரணப் பெயர்களைக் குறித்துள்ளன. உலக இசைகள் அனைத்திற்குமே இந்த ஏழு சுரங்களே ஆதாரமாய் அமைந்திருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இசை நுட்பங்கள் எல்லாம், இசை இலக்கண நூல்களின் கருத்துக்களோடு ஒத்துப்போவதுடன், இன்றுவரை இசைத்தமிழ் இலக்கணத்தைப் பாதுகாத்துவரும் இசைப் பெட்டகமாகவும் விளங்குகின்றது எனலாம்.

**டாக்டர் அ.சிவபெருமான்.**



**நூல்:** *பொறியில் அகப்பட்ட தேசம்*
**ஆசிரியர்:** *மு.பொன்னம்பலம்*

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதியை மையமாக வைத்து, அதனை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்ற தைரியமான, நேர்த்தியான அரசியற் கவிதையாக மு.பொன்னம்பலம் "பொறியில் அகப்பட்ட தேசம்" என்ற கவிதை நூலைத தந்துள்ளார். அது காலனித்துவ ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் கவிதையாகக் காணப்படுகிறது. அன்றைய தாக்குதலால் உலகம் அனைத்துமே தன் கைக்குள் எனச் சொன்ன பெரிய வள நாடு பேதை போல் விழித்து நின்றது மட்டுமல்லாமல், அந்த விமானத் தற்கொலைத் தாக்குதல், சர்வதேச அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது. இதை அலாவுதீன்களைக் கையில் போட்டு பூத எழுச்சியைக் கட்டுப்படுத்தியவர்களுக்கு அலாவுதீன்களே கையை மீறி பூதம் எழுந்து விரியத் தொடங்கிய கதையாக மாறியது என்கிறார் கவிஞர்.

மு.பொ. சம்பவங்கள் அனைத்தையுமே அழகான படப்பிடிப்பாகக் காட்டி ஆழ்ந்தகன்ற தன்மையுடனும், வலிந்து கூறாத இலகுவான பக்குவத்துடனும் கவிதை ஓட்டத்தைக் கொண்டு சென்றிருக்கின்றார். தமிழ் மொழி தவிர்ந்த வேற்றுமொழிச் சொற்களும் கவிதை வரிகளில் வீழ்ந்தாலும அவை அதற்கு கட்டாயப் பொருத்தம் உடையனவாகவும், விளக்கத்தை மேலும் தூண்டி விடுபவையாகவும் காணப்படுகின்றன. முற்றுமுழுதாக நவீன சிந்தனையுடன் கவிதைவரிகளை அமைக்காது தொட்டுக்கொள்ள ஊறுகாய் போல வேண்டிய இடங்களிலே தமிழ் இலக்கிய இதிகாசங்களை எடுத்தாளுகின்ற தன்மை இவரது இலக்கியப் புலமையைக் காட்டுகின்றது.

**லோ. துஷிதரன்.**

## நீதி, சட்ட மறுசீரமைப்பு, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவின் மூலம் நடத்தப்படுகின்ற

# கட்டுரைப் போட்டி

நீதி, சட்ட மறுசீரமைப்பு, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவின் ஊடாக நிரந்தர சமாதானத்தை உருவாக்கு முகமாக பாடசாலை மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் கட்டுரைப்போட்டி ஒன்றை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

1. பங்குபற்றுவோர்: க.பொ.த (உயர்தரம்) மாணவ, மாணவிகள் (தரம்12, தரம்13)
2. சொற்களின் அளவு: 1500-2000 இடைப்பட்ட சொற்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. மொழிமூலம்: தமிழ் அல்லது சிங்களம்
4. கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: 2003 ஓகஸ்ட் 15ஆம் திகதி கிடைத்தல் வேண்டும்.
5. தலைப்புகள்:
   1. ஒரே இனம் ஒரே நாடு.
   2. இனத்துவ ஒற்றுமை மூலம் தேசிய தனித்துவம்.
   3. நிலைத்து நிற்கும் சமாதானத்தை உருவாக்குவதற்கு இளைஞர் சமுதாயத்தின் பங்களிப்பு.
   4. நிலைத்து நிற்கும் சமாதானத்தை உருவாக்குவதில் கலாசாரத்தின் பணிகள்.
6. பரிசில்கள்: ஒவ்வொரு மொழிமூலத்தில் இருந்தும் வெவ்வேறாகத் தெரிவுசெய்யப்படும் சிறந்த கட்டுரைகளுக்கு பணப்பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
   - முதலாவது பரிவு - ரூ.15,000.00
   - இரண்டாவது பரிசு - ரூ.10,000.00
   - மூன்றாவது பரிசு - ரூ.5,000.00
   - நான்காவது தொடக்கம் பத்தாவது வரை - 1000.00

- இதற்கு மேலதிக சிறந்த கட்டுரைகள் அனுப்பிய நூறு ஆள்களுக்கு படைப்பாற்றல் மதிப்பீடு என்ற வகையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

★ தெரிவுசெய்யப்படும் வெற்றிபெற்ற சிறந்த சிங்கள, தமிழ்க் கட்டுரைகள புத்தகமாக அச்சிடப்படும்.

★ இதற்கு மேலதிகமாக வெற்றியீட்டும் மாணவ/மாணவிகள் கல்வி கற்கும் பாடசாலைகளின் நூலகப் பயன்பாட்டிற்காக பெறுமதி வாய்ந்த புத்தகப்பொதி ஒன்று வழங்குவதற்கு எண்ணியுள்ளோம்.

★ விண்ணப்பதாரர்கள் மேலே தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதேனுமொன்றைத் தெரிவுசெய்து கொள்ளலாம். கட்டுரைகள் Foolscap தாளில் ஒரு பக்கத்திலேயே எழுதப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் மாணவ /மாணவர்களின் சுயமான படைப்பு என பாடசாலை அதிபரினாலும் வகுப்பு பொறுப்பாசிரியரினாலும் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தையும் இணைத்து கட்டுரை அனுப்பப்படல் வேண்டும்.

★ கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'கட்டுரைப்போட்டி' எனவும் உரிய மொழி மூலத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

கட்டுரைகள் அனுப்பவேண்டிய முகவரி:

மேலதிகச் செயலாளர்
நீதி, சட்ட மறுசீரமைப்பு, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு.
தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவு,
இல.146, காலி வீதி, கொழும்பு - 03.

(C/28926) (21-25-14-10)


**BLOCK ICE PLANTS**
ஐஸ் கட்டி இயந்திரம்
Clear ice making facility can be provided on request
வேண்டுகோளின் படி சுத்தமான ஐஸ் உருவாக்கும் வசதிகள் வழங்கப்படும்.

**FLAKE ICE PLANTS**
ப்லக் ஐஸ் இயந்திரம்

**COLD ROOMS (PRE FAB/PORTABLE)**
குளிர்ச்சியான அறைகள் (எடுத்துச் செல்லக் கூடியன)

**REFRIGERATED WARE HOUSES**
குளிரூட்டப்பட்ட களஞ்சியங்கள்

**BLAST FREEZERS**
பிளாஸ்ட் குளிரூட்டிகள்

**PLATE FREEZERS**
பிலேட் குளிர்சாதனங்கள்

**INDIVIDUAL QUICK FREEZERS ( I Q F)**
தனிப்பட்ட விரைவான குளிரூட்டிகள்

**REFRIGERATION EQUIPMENT FOR VEGE. PROCESSING**
வெச் செய்முறைக்கான குளிர்சாதன உபகரணங்கள்

CALL - 01 - 887135 / 875597 / 074 402152
(Contact Person - Dilani)
தொலைபேசி - 887135 / 875597 / 074 402152
(தொடர்பு கொள்ளவேண்டியவர் - டிலானி)

*WE DESIGN - SUPPLY - INSTALL - SERVICE*
*நாங்கள் வடிவமைப்பு - விநியோகம் - இன்ஸ்ரல் - சேவை*

**KASE ENGINEERING**
(A Division of KS Trading (Pvt) Ltd.
1/37, 1/1, Veediya Bandara Mawatha, Etul Kotte.



# 100% உங்களின் வெற்றி எங்கள் வழியில்....

மூன்றே மாதங்களில்

NETWORK + ENGLISH + COMMUNICATION SKILLS & PERSONALITY DEVELOPMENT

WinSYS Networks
HI-TECH TRAINING & CONSULTING

The Leading CISCO, Microsoft and Linux International Certification courses

| | |
|---|---|
| CCIE Theory (Routing and Switching) | Rs.35000/- |
| CCNP Routing, Switching, Remote Access, CIT (per module) | Rs.20000/- |
| CCNA | Rs.15000/- |
| MCSE 7 Modules | Rs.35000/- |
| MCSA 4 Modules | Rs.20000/- |
| MCP 1 Module | Rs. 7000/- |
| Linux Administration | Rs.10000/- |
| Diploma in Hardware and Advanced Networking (PC Assembling & Trouble Shooting, Networking, Server Configuration, CISCO Routing) | Rs. 3500/- |

Cisco Lab :2500 series Routers, Frame relay switch, ISDN Routers, 2900 series switch, Access Server

Free Library Facility for outside Students

புதிய பிரிவுகள்
ஜூலை 21

WinSYS Networks
No. 31, 42nd Lane, Colombo 06.
Tel : 504023, 552819

PRP Ads

# பாடசாலைகளில் சுகாதார மன்றம் அமைக்குமாறு அமைச்சுகள் அறிவிப்பு

மண்டைதீவு,ஜூலை13

நாட்டிலுள்ள உயர்நிலை, இடைநிலைப் பாடசாலைகள் அனைத்திலும சுகாதார மன்றங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சும், சுகாதார அமைச்சும் கூட்டாக அறிவித்துள்ளன.

இரு அமைச்சுகளும் இணைந்து இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றினை வலயக்கல்விப் பணிமனைகள் ஊடாக சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைத்துள்ளன.

அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

இந்த வேலைத்திட்டம் ஒருங்கிணைந்த பாடசாலைச் சுகாதாரக் கலைத் திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதை நோக்கமாக கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது பாடசாலைக் கல்வியின் எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்டதல்ல.

மேலும், பாடசாலைக் கல்வியின் பரந்த நோக்கிற்கு மேற்பட்டதாக வேறு இலட்சியத்தை அடையும் நோக்கமுடையதும் அல்ல.பாடசாலையில் உள்ள அமைப்புக்கள் ஊடாக கல்வியின் நோக்கங்களை அடைய உதவும் அமைப்பாகும்.

ஆரோக்கியமான வாழ்விற்கான அத்திவாரத்தை ஏற்படுத்தக் கூடிய அறிவு, மனப்பாங்கு, திறன் மற்றும் நடத்தைகளை வளர்க்க இது உதவும்.

பாடசாலைச் சுற்றாடல் சுகாதாரம் பேணல், அடிப்படை சுகாதார வசதிகளை ஏற்படுத்தல், தனியாள் சுகாதாரத்தை மேம்படுத்தல் என்பன இதன் குறிக்கோள்களாக அமையும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-4-88)

# பதிவு அலுவலகம் இடம்மாற்றம்

கொழும்புத்துறை,ஜூலை13

யாழ்நகர் கிழக்கு பிரிவு மக்களின் பிறப்பு, இறப்பு பதிவு அலுவலகம் தற்போது கண்டிவீதி, அரியாலை சிவசக்தி வைத்திய நிலையத்தில் இயங்கி வருகிறது.

இதுவரை காலமும் ஈச்சமோட்டை ஆனந்தா வைத்திய நிலையத்தில் செயற்பட்டு வந்த பிறப்பு, இறப்பு பதிவு அலுவலகமே தற்போது அரியாலைக்கு இடம்மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதி மக்கள் இப்புதிய அலுவலகத்தில் தமது பிறப்பு, இறப்பு பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-30)

# எஜமானையும், வேறு மூவரையும் கடித்துக் குதறிய விசர்நாய்

## கச்சாய் பகுதியில் வியாழனன்று சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை13

தன்னை வளர்த்த வீட்டுக்கார எஜமானையும் அவரது சகோதரனையும் கடித்து விட்டு வீதிக்கு ஓடிய விசர் நாய் ஒன்று அவ்வீதியால் சென்று கொண்டிருந்த மேலும் இருவரையும் கடித்துக் குதறியது.

கொடிகாமம், கச்சாய் பகுதியில் கடந்த வியாழனன்று மாலை 7 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அருணாசலம் செல்வகுமார் (வயது 40), அவரது சகோதரர் அருணாசலம் சிவதாஸன் (வயது 32) ஆகிய இருவரும் கால் பகுதியில் காயமடைந்தனர்.

செல்வகுமார் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சகோதரன் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெற்று சென்றுள்ளார்.

சகோதரர் இருவருக்கும் விசர் நாய்க்கடி தடுப்பூசி போட ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மற்றைய இருவரையும் சிகிச்சையை பெற்றுக் கொள்ளுமாறு வைத்தியசாலை வட்டாரத்தால் கோரப்பட்டுள்ளது.

(எ-4-15-139)

# மாணவிகள் மீது பாலியல் இம்சை உடுகம பாடசாலை அதிபர் கைது!

மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய பாடசாலை அதிபரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

களுத்துறை மாவட்டம் உடுகம பிரதேசத்தில் உள்ள கனிஷ்ட பாடசாலை ஒன்றின் அதிபரான வீரசேன வராகொட வித்தாரனை என்பவரே கைது செய்யப்பட்டவராவார். இப்பாடசாலையின் ஆரம்ப வகுப்புகளில கல்வி பயிலும் ஐந்து சிறுமிகளை இந்த அதிபர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

கடந்த இரண்டு வருடங்களாகத் தொடர்ந்து அதிபரின் அறைக்குள் நடந்து வந்துள்ள இந்த இழிச்செயல்கள் தொடர்பாக பாதிக்கப்பட்ட சிறுமிகளின் தந்தையொருவரால் நெலுவைப் பிரதேசச் செயலக மக்கள் தொடர்பு அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டதையடுத்தே பொலீஸாரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் குறிப்பிட்ட அதிபருடன் சேர்ந்து இந்த இழிசெயலில் ஈடுபட்ட சிலர் அரசியல் செல்வாக்கினால் விசாரணைக்கு உட்படாமல் தப்பி விட்டதாகவும் கூறப்படுகிறது.

இது விடயத்தில் பாரபட்சமற்ற நீதி வழங்கப்படவேண்டுமெனக் கோரி அப்பிரதேசவாசிகளால் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றும் நடத்தப்பட்டது.

# கண்ணிவெடி அகற்றும் பணியில் ஒத்துழைக்க படையினர் தயக்கம்!

## எழிலன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை13

கண்ணிவெடிகளை அகற்ற வரும் வெளிநாட்டு நிறுவனங்களிற்கு படையினர் ஒத்துழைப்பு வழங்க தயக்கம் காட்டி வருவதாக விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் எழிலன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வெடிபொருள்கள் எங்கெங்கு புதைக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டக்கூடிய இரண்டாயிரம் வரையிலான வரைபடங்களை இலங்கைப் படையினர் வைத்துள்ளனர். இவ்வரைபடங்களை மிதிவெடி அகற்றும் பிரிவினர்களுக்கு வழங்கி ஒத்துழைப்பு வழங்க படையினர் தயக்கம் காட்டி வருகின்றனர் என்று எழிலன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடி அகற்றும் நிறுவனமொன்றுக்கு படையினர் வழங்கிய தரவுகளும் வரைபடங்களும் தவறானவை என அந்த நிறுவனத்தினர் படையினர் மீது குற்றஞ்சாட்டியிருந்ததாகவும் எழிலன் குறிப்பிட்டார்.

(ஒ-6)

# நாடு திரும்பும் இலங்கை அகதிகள் மறுவாழ்வு தொடங்க பல்வேறு வசதிகள்

## மண்டபம் முகாமில் இலங்கைத் தூதர் தெரிவிப்பு

ராமநாதபுரம்,ஜூலை13

மிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் தாயகம் திரும்பினால் அவர்களுக்கு வாழ்க்கையைத் தொடங்க தேவையான அனைத்து வசதிகளும் உடனே செய்து கொடுக்கப்படும் என்று இந்தியாவுக்கான இலங்கை துணைத் தூதர் சுமித் நகந்தலா மண்டபம் முகாமில் தெரிவித்தார்.

மண்டபம் அகதிகள் முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்களிடம் இலங்கை திரும்புவது தொடர்பான விருப்பத்தை கேட்டறிவதற்காக வந்திருந்த அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் அமைதியின்மை ஏற்பட்டதால் தமிழகம் வந்து அகதிகளாகத் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள், இலங்கைக்கு திரும்பினால் அங்கு அவர்கள் வாழ்க்கையைத் தொடங்க தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

அது தொடர்பான நம்பிக்கையை ஏற்படுத்தும் முயற்சியில் இலங்கை அரசு முழு வீச்சில் ஈடுபட்டுள்ளது.

மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியுள்ள - இலங்கை திரும்ப விருப்பம் தெரிவித்த - அகதிகளிடம் வெள்ளிக்கிழமை விண்ணப்பங்கள் பெறும் பணி தொடங்கியது. மேலும் அவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதற்கான ஆவணங்கள் பெறப்பட்டு சரிபார்க்கப்பட்டது, பிறப்புச் சான்றிதழ்களும் பெறப்பட்டது.

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் இலங்கை திரும்ப வேண்டும் என்பதில் மத்திய, மாநில அரசுகளும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் மிகுந்த ஆர்வமாக உள்ளனர்.

இலங்கை திரும்பும் அகதிகளை இலங்கை சென்றவுடன் முகாமுக்கு அனுப்பாமல் வாழ்க்கையைத் தொடங்கும் வகையில் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்பதில் தமிழக முதல்வர் ஜெயலலிதா மிக்க ஆர்வமாக உள்ளார்.

கல்வி கற்பவர்கள் அதனைத் தடையின்றி தொடர தேவையான வசதிகளும் செய்துகொடுக்கப்படும்.

தமிழகம் வந்தபின் இலங்கைத் தமிழர்களுக்கு பிறந்த குழந்தைகளுக்கும் இலங்கையில் குடியுரிமை வழங்கப்படும்.

இலங்கைத்தமிழர்கள் தமிழகத்தைச் சேர்ந்த பெண்ணையோ, ஆணையோ திருமணம் செய்திருந்து அவர்கள் இருவரும் இலங்கை திரும்ப விரும்பினால் விசா அல்லது முறைப்படி அனுமதி பெற்று இலங்கைக்கு வரலாம் மேலும் குறிப்பிடப்படும் காலத்துக்குள் அனுமதியை புதுப்பிக்கவேண்டும்.

இலங்கை திரும்ப விரும்புபவர்கள் கப்பலில் அழைத்துச்செல்லப்படுவார்களா, விமானத்தில் அழைத்துச்செல்லப்படுவார்களா என்பதை மத்திய, மாநில அரசும், இலங்கை அரசும் சேர்ந்தே முடிவு செய்ய வேண்டும் என்றார் துணைத்தூதர்.



சாவகச்சேரி லயன்ஸ் கழக வெள்ளிவிழா ஆண்டு நிர்வாகிகள் பதவியேற்பு விழாவில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட லயன்ஸ் கழக 306 பி மாவட்ட உப ஆளுநர் லயன் எஸ்.சிவானந்தன், முன்னாள் ஆளுநர் லயன் எஸ்.சிவபாதசுந்தரம் ஆகியோருக்கு கழகத் தலைவர் லயன் செ.சுப்பிரமணியம், லயன் க.சற்குணதேவன் ஆகியோர் மலர்மாலை சூட்டி வரவேற்பதைப் படத்தில் காணலாம். அருகில் கழகத்தின் புதிய தலைவர் லயன் வ.நாகேஸ்வரன் காணப்படுகிறார். (எ-117)

## சித்தமருத்துவத்தை நிறுவனமயப்படுத்தல்:

# குடாநாட்டின் பூர்வீக வைத்தியத்தை வேருடன் சாய்க்க எடுக்கும் முயற்சியா?

## மாணவர் ஒன்றியம் கேள்வி எழுப்புகின்றது

யாழ்ப்பாணம்,ஜூலை13

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு சித்த மருத்துவத் துறையை அபிவிருத்தி செய்வது மட்டுமே நோக்கமாக இருந்தால் அதற்கான நிதியை யாழ்.பல்கலைக்கழகத்திற்கு வழங்கி சித்த மருத்துவத் துறையை ஏன் ஒரு [illegible] தரமுயர்த்தக்கூடாது?

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம்.

யாழ்.பல்கலைக்கழக சித்தமருத்துவப் பிரிவைத் தரமுயர்த்துவது எனக் கூறிக்கொண்டு அதனை நிறுவனமயமாக்கி யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்து தனிமைப்படுத்த எடுக்கும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம் விடுத்திருக்கும் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:-

யாழ்.பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவம், தமிழ் மண்ணிற்குரிய பாரம்பரிய மருத்துவம் பல்கலைக்கழக சிறப்புப் பிரிவுகளில் இதுவும் ஒன்று. இப்பிரிவை தரமுயர்த்துவது எனக் கூறிக்கொண்டு, நிறுவனமாக்கி அதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்து தனிமைப்படுத்துவதற்கான முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை அவசர அவசரமாக தரமுயர்த்த முற்படுவதன் மர்மம் என்ன?

இத்துறை சார்ந்த அனைத்து மாணவர்களும் பெரும்பான்மையான விரிவுரையாளர்களும், நலன்விரும்பிகளும் இதனை விரும்பவில்லை. எனினும், அவர்கள் மீது இதனைத் திணிக்கும் முயற்சி நடைபெற்று வருகின்றது. இவ்விடயத்தில் பல்கலைக்கழக நிர்வாகம் மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டுகின்றதோ என நாம் சந்தேகிக்கின்றோம்.

சித்த மருத்துவத் துறை 1929 ஆம் ஆண்டுமுதல் 1983 ஆம் ஆண்டு வரை கொழும்பில் சுதேச வைத்திய நிறுவனத்தில் செயற்பட்டது. 1983 இல இடம்பெற்ற இனக்கலவரத்தை அடுத்து மாணவர்கள் கொழும்பு சென்று கல்வியைத் தொடர மறுத்ததனால் இப்பிரிவு யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்தின் கீழ் 1984 ஆம் ஆண்டிலிருந்து செயற்பட ஆரம்பித்தது. 1993இல் இப்பிரிவு கலைப் பீடத்தில் இருந்து விடுபட்டு துணைவேந்தரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

சித்த மருத்துவத்துறை கொழும்பில் செயற்பட்ட சுமார் 50 ஆண்டு காலப்பகுதியிலும் பார்க்க யாழ்.பல்கலைக்கழகத்தில் செயற்பட்டு வரும் இக்குறுகிய காலத்தில் பல வழிகளிலும் முன்னேற்றமடைந்து வருகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மை. இங்கு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை கொழும்பில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையிலும் பல மடங்காகும். இந்நிலையில், இத்துறையை ஒரு பீடமாக தரமுயர்த்த பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுப்பதே பொருத்தமுடையது. ஆனால், அண்மையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, பல்கலைக் கழக சித்தமருத்துவத்துறை சம்பந்தமாக பின்வரும் 2 விடயங்களை முன்வைத்துள்ளது.

★ சித்தமருத்துவத்துறையை தனி நிறுவனமாகத் தரமுயர்த்தல்.

★ இத்துறையை மீண்டும் கொழும்பு சுதேச மருத்துவ நிறுவனத்துடன் இணைத்தல்.

★ மீண்டும் கலைப் பீடத்துடன் இணைத்தல்.

உண்மையில் இந்த துறையை தரமுயர்த்துவதுதான் நோக்கமாக இருந்தால் மேற்குறிப்பிட்ட 2 ஆவது விடயம் அதாவது, கொழும்பு சுதேச மருத்துவ நிறுவனத்துடன் இணைப்பது பற்றிய கருத்து ஏன் எழவேண்டும்? இதற்கான பின்னணி என்ன என்பது யாவருக்கும் தெளிவாகத் தெரியும். மீண்டும் பாரம்பரிய மருத்துவத்தின் அடையாளத்தை எமது மண்ணில் இல்லாமல் செய்வதற்கான ஒரு முயற்சியே இதுவாகும்.

சித்த மருத்துவத்துறையை தனி நிறுவனம் (Institute) ஆக மாற்றினால் அதற்கென தனி நிதி வசதி கிடைக்கும். துரிதமாக இத்துறையை அபிவிருத்தி செய்யலாம் என்று கூறப்படுகின்றது. நிறுவனந்தான் சிறந்தது எனில் ஏனைய பீடங்கள் ஏன் தங்களை நிறுவனமாக மாற்றும்படி கோரவில்லை.

தற்போது எமது துறையில் தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள் உள்ளனர். மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தர விஞ்ஞான பிரிவில் சித்தி பெற்று, பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றவர்களே! பல்கலைக்கழக மாணவர்களுக்குரிய சகல உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிக்கத் தகுதிவாய்ந்தவர்களே! இத்துறை தனி நிறுவனமாக்கப்பட்டால் வருங் காலத்தில், இங்கு கல்வி பயிலவரும் மாணவர்களை உள்வாங்குவதற்கான தகைமை குறைவதற்கு வாய்ப்புள்ளது.

பல்கலைக்கழக துணைவேந்தரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் எம் துறையை, அங்கு கல்வி பயிலும் மாணவரினதும், விரிவுரையாளர்களினதும் கருத்துக்களை உதாசீனப்படுத்தி, நிறுவனமாக்க எடுத்த முயற்சியானது, அடிப்படை மனித உரிமை மீறலாகவே நாம் கருதுகின்றோம். எனவே, நாம் விரும்பாததை எம் மீது திணிப்பதை விடுத்து, எமது சித்த மருத்துவத் துறையை, யாழ்.பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவ பீடமாக தரம் உயர்த்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென பல்கலைக்கழக நிர்வாகத்தையும், கல்விமான்களையும், தமிழ்மக்களையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

-என்று அதில் உள்ளது.(எ-10-76)

"அகல்" தனியார் பாதுகாப்புச் சேவை
(பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றது)

**WALK IN INTERVIEW**

அரச நிறுவனங்களில் தனியார் பாதுகாப்புச் சேவையில் கடமைபுரிய, பின்வரும் தகைமையுடையவர்கள் 16.07.2003 புதன்கிழமை காலை 10.00 மணிக்குச் சகல ஆவணங்களுடன் நேரில் வரவும்.

கல்வித் தகைமை :- G.C.E.(O/L) வரை- வயது :- 22-55 வரை மார்பு - 32" உயரம் - 5' 4"

கல்விச் சான்றிதழ், கிராம சேவையாளரின் நற்சாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை.

முன்னாள் பொலீஸ், இராணுவ, அரச கூட்டுத்தாபனம் மற்றும் முன்அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

1220, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (20206) (31-16-17) **பணிப்பாளர்.**


## கொடிவார ஆரம்ப நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஜூலை13

யாழ்.மாவட்ட சமுதாய முன்னேற்ற நிலையத்தினால் நலிவுற்றோர் நலவாழ்வுத்திட்ட கொடிவார அங்குரார்ப்பண வைபவம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (எ-10)


**கண்ணீர் அஞ்சலி**

**சிவகுரு பரஞ்சோதி**

எமது நண்பன் **ப.பத்மரூபன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**சிவகுரு பரஞ்சோதி**

அவர்கள் 09.07.2003 அன்று லண்டனில் காலமானார். அன்னாரின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

-நண்பர்கள்,
2 ஆம் வருட பொறியியல்பீடம்,
மொறட்டுவ பல்கலைக்கழகம்.

(C28938) (32-16-17-31)



St.JOHN'S COLLEGE
JAFFNA

***ANNUAL PRIZE GIVING* - 2003**

Saturday 19th July 2003
at 10.00 a.m.

**CHIEF GUEST**

Rt.Rev Kumara Bandara Samuel Illangasinghe
Bishop of Kurunagala
&
Dr.(Mrs) Lakmini Priyakanthi Illangasinghe

**CHAIRMAN**

Ven S.P.Nesakumar
Archdeacon of Jaffna

Parents, Old Boys & Well-wishers are cordially invited.

**Principal, Staff & Students.**

(சி-28874) (31-16-17)



**THE AMERICAN COLLEGE OF HEALTH SCIENCES**
**NURSES' TRAINING FOR FOREIGN EMPLOYMENT**

Job Opportunities for both Qualified Male and Female Nurses in many Foreign Countries on Completion of Training

With qualifying Salaries of over US$4000 per month or equivalent USA, Canada & UK

2nd Intake August 2003

***We Offer you a suitably designed three - year Associate Degree course in Nursing***

* Approved by the Ministry of Health, Nutrition and Welfare
* Affiliated with the PACIFIC UNION COLLEGE Dept. of Nursing in California, USA
* Classes offered in English medium for Three years of intensive training
* Assistance to obtain International employment

***Admission Requirements***

* G.C.E. (O/L) with credit passes in mathematics and English or certificates of successful completion of additional English Language classes
* G.C.E. (A/L) passes in Biology and Chemistry
* Pass a Written and Oral Examination conducted by ACHS

INQUIRIES :

ACHS

**The Registrar,**
American College of Health Sciences, (ACHS),
254/1, Shodans Building,
Colombo Road, Peradeniya.

*Please call Rani,* Tele Fax : 08-385023
Tele: 074-472965
Email : achsky@sltnet.lk

PLEASE MEET THE OFFICIALS FROM ACHS AT THE SEMINAR TO BE HELD AT *JAFFNA Y.M.C.A. HALL ON 13th JULY 2003 FROM 10.00 A.m. TO 12.00 Noon* AND GET FIRST HAND INFORMATION OF THE COURSES AND OTHER DETAILS.

(சி-28936) (31-16-17)



ஜூலை **20-26** ***சுடர் ஒளி*** வார இதழ் விலை **16/=**

☞ வடுக்கள் சுமந்த கிளிநொச்சி தடைகள் அகன்ற பூரிப்பில்

☞ தலைவிரித்தாடும் கொடூரங்களுக்கு அடித்தளமிட்ட இலங்கையின் அரசியல்

☞ சமாதானம் வெறும் விளையாட்டல்ல (வடபுலம்)

☞ கரும்புலிகள் நினைவு தினத்தில் திருமலையில் நடந்தேறிய நிகழ்வு





☞ நக்கீரன் கோபாலுக்கு காவல் நீடிப்பு கவலை தாளாது மாமனார் தற்கொலை

☞ மாகாண நிர்வாகக் கட்டமைப்பு பேச்சுத் தொடர வழிவகுக்குமா?

☞ சங்கரியின் தலைமைத்துவத்துக்கு இந்தியா வழங்கிய ஆசி


☞ மரணத்திலும் இணைபிரியா இரட்டையர்

(C/28937) (14-18)




## நான் இலங்கைக்கு, பணத்தை விரைவாகவும் பாதுகாப்பாகவும் கிடைக்கக் கூடிய வழியில் அனுப்புகிறேன்.

"எங்கள் பழைய வீட்டைத் திருத்தி அமைக்கவும், தம்பி, தங்கையைப் படிப்பிப்பதற்கும் தான், நான் மத்திய கிழக்கு நாட்டுக்கு வேலைக்குப் போனேன். அங்கு சமையலறையிலுள்ள உபகரணங்கள் ஒரு நொடியில் சமைப்பதற்கு உதவுவதுடன் மிகவும் பாதுகாப்பாகவும் அமைந்துள்ளன. வீட்டுப் பணிப்பெண்ணாக நான் சம்பாதிக்கும் பணத்தை எனது வீட்டாருக்கு விரைவாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பக் கூடிய ஒரு வழியை நான் தெரிவுசெய்துள்ளேன். அது இலங்கை வங்கியின் "டோ ரு டோ" கடுகதிச் சேவையாகும். இலங்கை வங்கி நான் அனுப்பும் பணத்தைக் குறைந்த செலவில் மிக விரைவில் பாதுகாப்பாக எனது வீட்டுக்கே கொண்டு போய்ச் சேர்த்துவிடுகிறது. எனது பணத்தை எனது சொந்த ஊருக்கு அனுப்புவதற்கு நான் தேர்ந்தெடுத்துள்ள வழி சிறந்ததென்பதே எனது அசையாத நம்பிக்கையாகும்."



இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

Door to Door EXPRESS

மேலதிக தகவல்களுக்கு அருகிலுள்ள இலங்கை வங்கி அல்லது தலைமைக் காரியாலத்திலுள்ள நண்பன் பண்டாரவிடம் 447831, 346841

PHOENIX O&M 0981

## வீடு, காணி விற்பனைக்கு

☆ கோண்டாவில் சந்திக்கு அண்மையில் சகல வசதிகளுடன் (5பரப்புக் காணியுடன்) கூடிய மாடி வீடும் -

☆ பாற்பண்ணை வீதியில் 24 பரப்பு தோட்டக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

S.சுரேஸ்
இல. 43, கலைவாணி மில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(20171)(21-25-14-18) T.P : 0777 064110

## ஆளணி தேவை

யாழ்.நகரில் இயங்கும் மொத்த விற்பனை நிலையம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

1) அலுவலக லிகிதர் (பெண்கள்)
2) விற்பனையாளர் (ஆண்கள்)

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை 20-07-2003இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல. 1954
C/o உதயன்,
யாழ்ப்பாணம்.
(20188)(21-14-18)

## தேவை

(1) விற்பனைப் பிரதிநிதி
(2) கணக்காளர்
(3) விற்பனையாளர்

வயது எல்லை (25-50) வரை
விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

ஜமுனா ஸ்ரோர்ஸ்,
தம்ரோ தளபாட நிலையம்,
நெல்லியடிச் சந்தி, நெல்லியடி.
(20159)(21-26-14-18) தொ.பே. 0777-730332.

## கேள்வி அறிவித்தல்

### வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு
### கட்டடங்கள் திணைக்களம்

01. வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் வகுப்பறை புளொக் கட்டம் I நிர்மாண வேலைக்கு கட்டடத் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரால் 2003-07-31 முற்பகல் 10.00 வரை சீலிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
02. கேள்விப் பத்திரங்கள் 2003.07.25ஆம் திகதி பிற்பகல் 3.30 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமான ரூபா ஆயிரம் மட்டும் (ரூபா 1000.00) செலுத்தி யாழ்ப்பாணம், கரையோர வீதி, கட்டடங்கள் திணைக்களம், பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
03. கேள்விகள் மூடப்பட்டவுடன் பத்தரமுல்ல, செத்சிரிபாய, இரண்டாவது மாடி, கட்டடத் திணைக்கள, ஒப்பந்தக் கிளை அலுவலகத்தில் உடன் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளித்திருக்கலாம்.
04. நிர்மாணப் பயிற்றுவிக்கும் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட நிர்மாண ஒப்பந்தகாரர்களின் தேசிய பதிவு மற்றும் தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் தரம் M6 மற்றும் அதற்கு மேல் நீர் விநியோக வடிகாலமைப்பு ஒப்பந்தகாரர்களாகப் பதிவுசெய்திருப்பதோடு இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர்கள் சங்க அங்கத்தவராயுமிருத்தல் வேண்டும். கேள்விப் படிவங்கள் பெற முன் ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகம் மற்றும் NCCASL அங்கத்துவ அட்டையையும் சமர்ப்பிக்க வேண்டும்.
05. பொறியிடப்பட்ட கேள்விகள் நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் தலைவர், கேள்விச் சபை, கட்டடத்திணைக்களம், 'செத்சிரிபாய' ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு முடிவு நேரத்திற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
06. தாமதித்துக் கிடைக்கப் பெறும்கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும், பாதுகாப்புக் காரணங்களுக்காக கேள்விகள் மூடப்படுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னர் 'செத்சிரிபாய' வளவுக்குள் வரும்படி கேள்விதாரர் வேண்டப்படுகின்றனர்.
07. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். மேலதிக விவரங்களை பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்), கட்டடங்கள் திணைக்களம், கரையோர வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஏ.டீ.விக்கிரமசிங்ஹ
கட்டடங்கள் பணிப்பாளர்.கட்டடங்கள் திணைக்களம்.
'செத்சிரிபாய''
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
பத்தரமுல்ல.
(C-28910) (21)

## மூக்குக் கண்ணாடி விநியோகம்

தென்மராட்சி, ஜூலை13

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் கடந்த மாதம் நடத்தப்பட்ட இலவச மருத்துவ சிகிச்சை முகாமின போது மூக்குக் கண்ணாடி பெறுவதற்குச் சிபார்சு செய்யப்பட்டவர்களுக்கு இன்று காலை 9 மணியளவில் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் வைத்து மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (எ-10)

## மாடுகள் மீண்டும் உரிமையாளர்களிடம்

தென்மராட்சி, ஜூலை13

வன்னிப் பகுதியிலிருந்து அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தில் கொண்டுவரப்பட்ட ஒன்பது மாடுகளை அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க சாவகச்சேரி நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

இந்த மாடுகளை லொறியில் ஏற்றி வந்தபோது கொடிகாமம் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட பரம் கனகராசா, முருகன் தம்பிஐயா ஆகியோர் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்த நீதிவான் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார்.

மாடுகளின் உரிமையாளர்களான க.இளையதம்பி என்பவரிடம் ஆறு மாடுகளையும், வ.இரத்தினசிங்கம் என்பவரிடம் மூன்று மாடுகளையும் ஒப்படைக்குமாறு கொடிகாமம் பொலீஸாரை நீதிவான் பணித்தார். (எ-117)

## தனிநபரின் முயற்சியினால் மாசேரியில் வீதி புனரமைப்பு

வரணி, ஜூலை13

மாசேரி, இடைக்குறிச்சி கிராம எல்லையில் இருந்து குருநாதர் ஆலயம் வரையும் செல்லும் ஒரு கிலோ மீற்றர் நீளமான மண்பாதை தனிநபர் ஒருவரின் முயற்சியினால் புனரமைக்கப்பட்டுள்ளது.

குருநாதர் ஆலயத்தின் பரிபாலகர் வே.சிதம்பரனின் முயற்சியினாலேயே இப்பாதை புனரமைக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் உள்ள தனது உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் பணம்பெற்று சுமார் 2 லட்சம் ரூபா செலவில் புனரமைப்பு இடம்பெற்றுள்ளது. (எ-10-170)

## ஆஸ்பத்திரிக் கட்டட புனரமைப்புக்கு நிதியுதவி

தென்மராட்சி, ஜூலை13

கடந்தகால யுத்தத்தின் காரணமாகச் சேதமடைந்த பளை வைத்தியசாலைக் கட்டடத்தைப் புனரமைப்பதற்கு உலக தரிசன நிறுவனம் 10லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்நிதியின் மூலம் வைத்தியசாலை வளவில் அமைந்துள்ள மருத்துவ அதிகாரியின் விடுதியைப் புனரமைத்து அதில் வெளிநோயாளர் பிரிவினை இயங்க வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-10-117)

## விற்பனையாளர்கள் தேவை

எமது நிறுவனத்துக்கு
அனுபவமுள்ள பெண்
விற்பனையாளர்கள் தேவை.
நேரில் தொடர்பு கொள்க:
ஸ்கை எலக்ரோனிக்ஸ்
I.C., ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(20190) (21-14-1815)

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான ஆசிரியர் P. அம்பிகைபாகனின் பௌர்ணமிக் கருத்தரங்கு

காலம்:- 13-07-2003
காலை 10.00-மாலை 3.00மணி வரை
இடம்:- JAFFNA CENTRAL COLLEGE
அனுமதி: (இலவசம்) ஆசிரியரின் மாதிரிப் பரீட்சைத்தாள்கள் பெறும் பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரம்
(C/28913) (28-12-17)

## காணி தேவை

இளம் குடும்பமொன்று யாழ். பிரதேசத்தில் மீளக்குடியமர்வதற்கு 4 பரப்புக் காணி தேவைப்படுகின்றது. காணி யாழ். - பலாலி வீதிக்கு அருகில், திருநெல்வேலிச் சந்திக்கு அப்பால் விரும்பத்தக்கது. விற்க விரும்புபவர்கள் நேரில் தொடர்புகொள்ளவும். இடைத்தரகர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள். தொடர்புகளுக்கு: T.P.No. 0041318692443
(21-19-14-18-15) (19874)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கடமையாற்றும்
செல்வி விஜயலதா ஐயம்பிள்ளை
(Head Teacher - Junior English Division & Montisori)
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சிவஞான அம்மா ஐயம்பிள்ளை

அவர்கள் காலமானதையிட்டு நாம் மிகவும் மனம்வருந்துகின்றோம். அவரது பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து அவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

BRITISH BUSINESS SCHOOL
(20158) (21-26-14-18)

## துறவறப் பொன்விழாவில் பாராட்டுகின்றோம்



### அருட்சகோதரி பிறிஜிற் கபேரியல்பிள்ளை

(இளவாலை திருக்குடும்பக் கன்னியர்மடம்)

தாய்மை மிக்க துறவறத்தில் பொன்விழாக்காணும் அருட்சகோதரி பிறிஜிற் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் நாங்கள் பேருவகை அடைகின்றோம். அன்பும் கருணையும் தோய்ந்த இவரது, நிர்வாகத்தில் கடந்த இரண்டு தசாப்தங்களாக இயங்கிவரும் கத்தோலிக்க சிறுமியர் இல்லம் இவரது உன்னதமான சேவைக்கு ஒரு சான்று. அநாதைச் சிறுவர்களின் கண்ணீர்துடைத்து, அவர்களின் வாழ்வு மேன்மையுற அயராது உழைத்து வரும் இவரது அர்ப்பணிப்பு நிறைந்த சேவையை நாங்கள் பாராட்டி நிற்கின்றோம்.நல்ல உடல் உள ஆரோக்கியத்துடன் இவர் பன்னெடுங்காலம் வாழ்ந்து தனது பணியை பற்றோடு ஆற்றிட புனித அன்னாளின் ஆசிகளை வேண்டி அழுத்தமாக பிரார்த்தனை செய்கின்றோம்.

வாழ்க அருட்சகோதரி பிறிஜிற்! வளர்க அளப்பரிய நற்பணிகள்!

இளவாலை. (20142) (21-14-18-25) சௌந்தரநாயகம் (சந்திரன்) குடும்பம்.

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 29 - 01 - 1939



ஆண்டவன் அடியில் 13 - 07 - 2001

### அமரர் சதாசிவம் சிவசம்பு (பாண்டியன்)


ஈரவிழிகளுடன் ஈராண்டு சென்றதையா
நூறாண்டு சென்றாலும் மாறாது எம்துயரம்!

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அல்லாரை வடக்கு,
மீசாலை. (சி-28914) (21-14-18-26)

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 03 - 04 - 1923



ஆண்டவன் அடியில் 11 - 07 - 2002

### அமரர் பரமு கந்தையா (V.P.K.)

திதி: 13-07-2003

எங்கள் அன்புத் தெய்வமே!
திக்கரையானைத் தினமும் பணிந்தீர்கள்
அவன் தன் பூங்காவனத்தன்று
உங்களை அழைத்தானோ?
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
ஆறுதல் சொல்ல எமக்கு நீங்களில்லையே!
உங்கள் பிரிவு தாங்காமல்
தினமும் தவியாய்த் தவிக்கிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
திக்கரை முருகனின் பாதம் பணிகின்றோம்.

விளானை, கரணவாய், கரவெட்டி. (20127)(21-14-1815) மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## சஞ்சீவனின் நினைவு தினம்

2000ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப் பட்ட யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் 3ஆம் ஆண்டு நினைவுதினம் இன் றாகும். இதனையொட்டி யாழ்.இந்துக்கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் இன்று யாழ்போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேசமயம்-

சஞ்சீவனின் நினைவுதினம் இன்று மாலை 4.00மணிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (ம)

## நினைவஞ்சலிக் கூட்டம்

சிறந்த துடுப்பாட்ட மத்தியஸ் தரும் சிறந்த காற்பந்தாட்ட வீரரும், கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனுமாகிய சிவலிங்கம் சுரேந்திரலிங்கத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-10)

## தொழில்நுட்ப நிறுவனத்தின் திறப்புவிழா

உழவர்களின் நன்மை கருதி கிளிநொச்சி கரடிப்போக்கில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு 'வன்னி வேளாண தொழில்நுட்ப நிறுவனம்' சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் சுடரோற்றல், தேசியக் கொடியேற்றல், அகவணக்கம் ஆகியனவும், அதனைத் தொடர்ந்து உரைகளும் இடம்பெறவுள்ளன (எ-10)

## படைப்பாளிகள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசங்களுக்குட்பட்ட கலைஞர்கள், படைப்பாளிகளுக்கான விசேட கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இசைக்குழுக் கலைஞர்கள், படைப்பாளிகள், வாத்தியக்கலைஞர்கள, நாடகக் கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## சனசமூக நிலைய பொன்விழா

இளவாலை, காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையத்தின் பொன்விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நிலையத் தலைவர் செ.மாவிரதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

முன்னாள் வலி. வடக்கு பிரதேச சபைத்தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன் உட்படப் பலர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.(ஐ-135)

## வருட விருந்துபசாரம்

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்களுக்கான வருட விருந்துபசார வைபவம் (Year end party) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளது.

## நேற்றைய போட்டி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாணம் - சி.குகாஜினி, 3ஆம் இடம் - அம்பாறை - பி.ஜி.அஸாந்தினி.

**உயரம் பாய்தல் (ஆண்கள்)**

முதலாமிடம் - யாழ்ப்பாணம் - எஸ்.கமலமோகன், 2ஆம் இடம் - யாழ்ப்பாணம் - என்.கிஷோக்குமார், 3ஆம் இடம் - திருகோணமலை - டி.ஜி.அருணலங்க.

**உயரம் பாய்தல் (பெண்கள்)**

முதலாமிடம் - முல்லைத்தீவு - எஸ்.சிவசாந்தி, 2ஆம் இடம் - யாழ்ப்பாணம் - எஸ்.சுமாஜினி, 3ஆம் இடம் - அம்பாறை - ஏ.என்.ஹஷாந்தினி.

**குண்டெறிதல் (ஆண்கள்)**

முதலாமிடம் - யாழ்ப்பாணம் - எம்.பிரதீப்குமார், 2ஆம் இடம் - யாழ்ப்பாணம் - ஈ.உதயகுமார், 3ஆம் இடம் - திருகோணமலை - எஸ்.றிஸ்நாத்.

**குண்டெறிதல் (பெண்கள்)**

முதலாமிடம் - கிளிநொச்சி - எஸ்.தாரணி, 2ஆம் இடம் - யாழ்ப்பாணம் - ரி.கார்த்திகா, 3ஆம் இடம் - திருகோணமலை - ஏ.ஜெ.ஸ்மத்பானு.

**ஈட்டி எறிதல் (ஆண்கள்)**

முதலாமிடம் - திருகோணமலை - ஜி.கே.ஜனக நிஷாந்த, 2ஆம் இடம் - திருகோணமலை - ஆர்.கே. சுஜித், 3ஆம் இடம் - திருகோணமலை - ஏ.எச்.சுக்ரி.

**ஈட்டி எறிதல் (பெண்கள்)**

முதலாமிடம் - திருகோணமலை - கே.மனோரூபி, 2ஆம் இடம் - யாழ்ப்பாணம் - சேதுப்பிரியா, 3ஆம் இடம் - கிளிநொச்சி - எஸ்.ஜெயகுமாரி

**110 மீற்றர் தடை தாண்டல் (ஆண்கள்)**

முதலாம் இடம் - யாழ்ப்பாணம் எஸ்.ரஞ்சித்குமார், 2ஆம் இடம் - யாழ்ப்பாணம் - ஏ.கமலகிரேசன், 3ஆம் இடம் - திருகோணமலை - எ.எஸ்.சஸ்மின்.

**100 மீற்றர் தடை தாண்டல் (பெண்கள்)**

முதலாமிடம் - திருகோணமலை - பி.ஜெயசுதர்சினி, 2ஆம் இடம் - யாழ்ப்பாணம் - சி.குகாஜினி, 3ஆம் இடம் - அம்பாறை - வை.டி.எம்.சுமதிபாலா

**5000 மீற்றர் (ஆண்கள்)**

முதலாமிடம் - அம்பாறை - ஜி. பிரேம விமலசேன, 2ஆம் இடம் - அம்பாறை - டபிள்யு.ஏ.எஸ்.ரணசிங்க, 3ஆம் இடம் - மன்னார் - கே.குமரன்.

**5000 மீற்றர் (பெண்கள்)**

முதலாம் இடம் - யாழ்ப்பாணம் - எஸ்.சிவரஞ்சினி, 2ஆம் இடம் - அம்பாறை - எஸ்.சந்திரராணி, 3ஆம் இடம் - யாழ்ப்பாணம் - என்.மேசி.

**4x100 மீற்றர் அஞ்சலோட்டம் (ஆண்கள்)**

முதலாம் இடம் - திருகோணமலை, 2ஆம் இடம் - யாழ்ப்பாணம், 3ஆம் இடம் - அம்பாறை. (ம-5-86)


**பகல், இரவு, வேலை ஆள்கள் தேவை**

திருநெல்வேலிக்கு அண்மையாக இயங்கும் தனியாருக்குச் சொந்தமான பண்ணை ஒன்றுக்கு பகல் நேர வேலை ஆள்கள் (ஆண்,பெண்) மற்றும் இரவு மேற்பார்வையாளர் (ஆண்) ஆகியோர் தேவை.

திறமைக்கேற்ப வேதனம் வழங்கப்படும்.

தொடர்பு:

விளம்பர இல-1955
மே/பா. உதயன்,
யாழ்ப்பாணம்.

(20201) (32-16-17-31)


## கண்ணீர் அஞ்சலி

### கந்தையா கணபதிப்பிள்ளை

09.07.2003 அன்று காலமான எமது சமூகத்தின் மூத்தவரும் பிரபல தொழிலதிபருமான

### கந்தையா கணபதிப்பிள்ளை

அவர்களின் மறைவினால் துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை ஆகியோருக்கு ஆறுதல் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (20216) (29-13-17-31)

உற்றார், உறவினர்,
நண்பர்கள், பணியாளர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### செல்வரத்தினம் சசீந்திரன்

(லெப்டினன்ட் கேணல் கதிர்)

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சசீந்திரன் (லெப்டினன்ட் கேணல் கதிர்) 14.06.2003 அன்று வீரச்சாவு அடைந்துவிட்டார்.

இவர் திரு.திருமதி செல்வரத்தினம் - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் செல்வரஜனி (சுவிஸ்), பிரகலாதன் (சுவிஸ்), திருமகள் (நிதி), கஜீகரன் (சுவிஸ்), வசீகரன் (யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் தரம்11 மாணவன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுபேந்திரன் (சுவிஸ்), சிவமலர் (சுவிஸ்), நாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சங்கவி (சுவிஸ்), சாஜித்தன் (சுவிஸ்), அனோஜன், ஜனனி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிருந்தாபன் (சுவிஸ்), பிரவீற் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் நினைவுக்கல் நாளை (14.07.2003) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நாட்டப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*"முத்தகம்"*
*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*
T.P-077-6048949. (20212) (29-13-17-31)

தகவல்:
சி.செல்வரத்தினம் (தந்தை)

### திருமதி பூரணம் கந்தையா

கேணியடி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் கந்தையா (07.07.2003) திங்கட்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை கந்தையாவின் (தில்லையர்) அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

133/15, கேணியடி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (20215) (29-13-17-31)

தகவல்:
திருமதி உமாதேவி
திருச்செல்வம் (மகள்)

### சங்கரப்பிள்ளை சொக்கலிங்கம்

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி காட்டுக் கந்தோர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சொக்கலிங்கம் அவர்கள் நேற்று (12.07.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்புப் புத்திரனும் காலஞ்சென்ற யோகம்மா ஆசிரியரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பாறுபதி அவர்களின் அன்புக் கணவரும் யசோதாதேவி (பிரான்ஸ்), கிருஷ்ணலிங்கம் (கடற்றொழில் அமைச்சு), சத்தியதேவி (உதவி விவசாயப் பணிப்பாளர் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பத்மசுந்தரம் (பிரான்ஸ்), சத்தியரூபா (ஆசிரியை, வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), யோகராஜா (உரிமையாளர், நியூ வன்னி குயிக் பிறிண்டேஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரமிதா (பிரான்ஸ்), அஜந்தி, கோபிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற துரைச்சாமி அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இல.77, குட்செட் வீதி, வவுனியாவிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

*மு.கதிரவேலு*
*4-B, குட்செட் வீதி,*
*வவுனியா.* (C28943) (32-13-17-31)

தகவல்:
சொ.கிருஷ்ணலிங்கம் (மகன்)
(கடற்றொழில் அமைச்சு)
தொ.பே. 024-23766.

## தீந் தமிழ்க் காவலனே வாழி!



எங்கள் பெரு மதிப்புக்குரிய
**உயர்திரு.ஆறு.திருமுருகன்**
அவர்களுக்கு
யாழ்.கல்வியியற் கல்வி சமூகம்
"சிவநெறித் தவமகன்"
எனும் விருது வழங்கி உயர் கௌரவம் அளித்ததை இட்டு அவரை வாழ்த்துவதுடன் அவர் சமயப்பணி சிறக்க எல்லாம் வல்ல ஸ்ரீ பரராஜ சேகரனை இறைஞ்சுகின்றோம்.

கொழும்பு - யாழ்ப்பாணம். (20162) (32-13-17-31) **K.R.S** நிறுவனம்.

சிவமயம்

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆனி மாதம் 30ஆம் நாள் (14-07-2003) திங்கட்கிழமை காலை 10.00 மணிமுதல் 11.00 மணிவரையுள்ள கன்னி லக்கின சுபவேளையில் ஸ்ரீ பிடாரி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

எமது ஏக புத்திரி திருநிறைசெல்வி

### திரியம்பிகை

அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து எமது செல்வியை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

3ஆம் வட்டாரம்,
நயினாதீவு,
தொ.பே.07021 2995
07021 3429
(20147) (19-13-17-31)

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி
கோ.வாமதாசன்
வா.நாகலெட்சுமி.


**Institute Of Personnel Management Sri Lanka (Inc.)**

*"One day seminar on Supervisory Development"*

Matters Included for the discussion in this seminar are;

* Role of the Supervisor
* Understanding Jobs / Tasks and how to Perforn a task in Better way Improving Employee
* Productivity Supervisor as a Team Leader
* Motivating Employees for Better Results
* Maintaining Discipline at Work place

Date : 19th July 2003
Venue : Jaffna University
Fee : Rs.2,000/- per Seminar per partici pant inclusive of lunch, Tea and Seminar Materials.
Registration : Before 16th July 2003 at IPM. Colombo-05 or IPM Coordinating Office. No : 16/4, Seenier Lane, Jaffna.

(20185) (31-13)


## 65 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 | 10 |
| - | - |
| 04 | 05 |
| - | - |
| 1942 | 2003 |



வைத்திய கலாநிதி
**செல்வி பரமேஸ்வரி சின்னப்பா**
**(PATHOLOGIST - யாழ்.போதனா வைத்தியசாலை)**

10.05.2003 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் நினைவாக இன்று (13.07.2003) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வம் நோயுற்ற நேரங்களிலும் பின்னர் மரணச் சடங்கிலும் பல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் புரிந்த அனைவருக்கும் எமது தனித்தனியான நன்றிகள்.

*மடம் ஒழுங்கை,*
*திருநெல்வேலி வடக்கு,*
*யாழ்ப்பாணம்.* (20211) (32-13-17-31)

-குடும்பத்தினர்.

# 29ஆவது தேசிய விளையாட்டு விழா செப்ரெம்பருக்குப் பிற்போடப்பட்டது

கொழும்பு,ஜூலை13

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெற இருந்த 29ஆவது தேசிய விளையாட்டு விழா செப்ரம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

தேசிய விளையாட்டு விழா நடைபெறவுள்ள யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகள் குறித்த காலப்பகுதியில் நிறைவு பெறுமா என்ற சந்தேகம் நிலவுவதால் போட்டிகளை பிற்போடவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாக விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் நாயகம் மில்டன் அமரசிங்க கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன் யாழ்ப்பாணம் வருகை தந்த அவர் நிலைமையை நேரில் பார்வையிட்டதோடு, இங்குள்ள அதிகாரிகளுடனும் கலந்துரையாடல்களையும் நடத்தியிருந்தார். கொழும்பு திரும்பிய பின்னர் விழா பிற்போடப்பட்ட அறிவிப்பை அவர் விடுத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது :-

ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் உலக் கிண்ண மெய்வன்மைப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. இதில் எமது நாட்டு வீர வீராங்களைகள் பங்குபற்றவுள்ளதனால், யாழ். மாவட்டத்தில் நடைபெறும் தேசிய விளையாட்டு விழாவில் அவர்கள் பங்குபற்ற முடியாத நிலை ஏற்படும்.

முதல்முறையாக யாழ்.குடாநாட்டில் நடைபெறுகின்ற தேசிய விளையாட்டு விழாவில் தென்பகுதியிலுள்ள சிறந்த வீரர்கள் பங்குபற்றாதுவிட்டால் வடபகுதி மக்கள் பலத்த ஏமாற்றம் அடைவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும் நிர்மாணப் பணிகளை அமைச்சு அதிகாரிகள் குழுவுடன் சென்று பார்வையிட்டதாகவும், நிர்மாணப் பணிகள் குறித்த காலப் பகுதிக்குள் நிறைவடைக்கூடிய சாத்தியமில்லை எனவும் அவர் சொன்னார். (ம-5)

# மட்டக்களப்பில் படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல்

மட்டக்களப்பு,ஜூலை13

மட்டக்களப்பு, வாழைச்சேனையில் நேற்று சனிக்கிழமை, படையினர் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றை மேற்கொண்டனர்.

படையினரும் பொலீஸாரும் இணைந்து இத்தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் பேய்த்தாழை, புதுக்குடியிருப்பு, கண்ணன்கிராமம் ஆகிய பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு, அப்பிரதேசத்திலுள்ள வீடுகள் ஒவ்வொன்றையும் படையினர் சோதனைக்குட்படுத்தினர் எனக் கூறப்படுகிறது.

நேற்றைய சுற்றிவளைப்புக் காரணமாக அப்பகுதி மக்களின் நாளாந்தக் கடமைகள் பாதிக்கப்பட்டன.(ம9)

# தீவிரவாதத்தை இலங்கையில் இந்தியாவே பரப்பியது!

## வெளியுறவுத்துறை செயலர் தெரிவிப்பு

இஸ்லாமபாத்,ஜூலை13

தீவிரவாதத்தை, இந்தியாவே இலங்கைக்கு கொண்டுசென்றது என பாகிஸ்தான் வெளியுறவுத் துறைச் செயலாளர் றியாஸ் கொக்கர் தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தான், பயங்கரவாதத்தைப் பரப்பி வருவதாக இந்தியா குற்றஞ்சாட்டி வருவது குறித்து கருத்து வெளியிட்டபோது றியாஸ் இப்படிக் கூறினார். பயங்கரவாதம் இலங்கையில் பரவ இந்தியாவே காரணமாக இருந்தது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (ம-9)

# அமைதிச் சூழலில் சுற்றிவளைப்பு; எதிர் நடவடிக்கைக்கு தூண்டும்!

## புலிகளின் மட்டு-அம்பாறை பொறுப்பாளர் எச்சரிக்கை

வாழைச்சேனை,ஜூலை13

இன்றைய நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றிவளைப்பு தேடுதலை மேற்கொள்வதற்கு படையினர் முனைவதானது, எம்மை அரசியல் நடவடிக்கைகளை நிறுத்தி அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து சிந்திக்கத் தூண்டும்.

இப்படித் தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் கிருஷின். நேற்று வாழைச்சேனையில் இடம்பெற்ற சுற்றிவளைப்பு நடவடிக்கை குறித்து படை அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பேசியபோதே அவர் இப்படிக் கூறியுள்ளார். அவர் படை அதிகாரிகளிடம் மேலும் கூறியதாவது:-

போர்நிறுத்த சூழலில் வீடு வீடாகச் சுற்றிவளைப்பு தேடுதலை நடத்த முற்படுவது மக்கள் மத்தியில் பதற்றத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தும். அமைதிச் சூழலில் தேடுதல் நடத்தப்படுவதை எந்த வகையிலும் அனுமதிக்கமுடியாது. அப்படி சுற்றிவளைப்பு தேடுதலை மேற்கொண்டால் எதிர் நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடவேண்டிவரும் - இப்படி கிருஷின் படை அதிகாரிகளிடம் கூறினார்.

இதேவேளை - இனந்தெரியாத ஆயுததாரிகள் நடமாடுவதாக வாழைச்சேனை பொலீஸ் நிலையத்திற்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில், எல்லைப்புற முஸ்லிம் கிராமங்களில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டதைப் போன்றே தமிழ்க் கிராமங்களிலும் ரோந்து நடவடிக்கைகளில் இராணுவத்தினர் நேற்றுக்காலை ஈடுபட்டதாக வாழைச்சேனை இராணுவக் கட்டளை தலைமையக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது வழமையான நடவடிக்கை என்றும் நேற்று நடைபெற்ற ரோந்து நடவடிக்கையின் போது எவ்வித அசம்பாவிதமும் இடம்பெறவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

## துணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும்படி அவருக்கு அழுத்தம் கொடுப்பார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை அரசின் முக்கிய அமைச்சர்களையும் ஜனாதிபதியையும் கூட அவர் சந்தித்துப் பேசுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# இடைக்கால நிர்வாகத்தை வழங்கும் சக்தி அரசுக்கு உண்டு

## லங்கா சமசமாஜக் கட்சி கூறுகிறது

வடக்கு-கிழக்கின் அபிவிருத்திக்கென இடைக்கால நிர்வாக அமைப்பொன்றை உருவாக்கிக்கொள்ளும் சகதி, இப்பொழுது அரசுக்கு உண்டு என்று லங்கா சமசமாஜக்கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோன் கூறியதாவது:-

இந்த நிர்வாகக் கட்டமைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒரு தரப்பினராக இருப்பார்கள். மத்திய அரசினால் இந்த அமைப்பு நிர்வகிக்கப்படவேண்டும். வடக்கு - கிழக்குக்கு இடைக்கால அரசியல் நிர்வாகத்தை வழங்கும்போது ஏனைய அரசியல் கட்சிகளினதும் குழுக்களினதும் ஜனநாயக உரிமைகள் மதிக்கப்படவேண்டும். இந்த நிர்வாகத்தை வழங்குவதற்கு முன்னர், மக்கள் மத்தியில் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்படுவது அவசியம்.

- இப்படி பட்டி வீரக்கோன் தெரிவித்தார். (ம-9)

## கரபந்தாட்டம்

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலி.மேற்கு பிரதேச சபையும் சனசமூக நிலையங்களும் இணைந்து நடத்தும் விளையாட்டுப் போட்டித் தொடரில் இன்று காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை மேற்கு காந்தி சனசமூக நிலைய மைதானத்தில் ஆண்களுக்கான கரபந்தாட்டம்(செற்அப்) போட்டி இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் இப்பிரதேச சபைக்குட்பட்ட 12 சனசமூக நிலைய அணிகள் கலந்துகொள்கின்றன.(ம-5-86)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் செவ்வாய் அல்லது புதன்கிழமை அவர் மீண்டும் வன்னி வருவதாக விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்முறை இடைக்கால நிர்வாகம் தொடர்பான மேலோட்டமான வரைபு நகலுடனேயே அவர் கிளிநொச்சிக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதக் கொள்வனவு தொடர்பான பல ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட உள்ளன என்று இஸ்ரேலியச் செய்திகள் கூறுகின்றன.

ஏற்கனவே இஸ்ரேலிடம் இருந்து அதிவேகத் தாக்குதல் படகுகள், கிபிர் விமானங்கள் என்பவற்றை இலங்கை கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## மூழ்கடிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பன்னிரண்டு பேரும் இல்லை என்று கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்திருந்தனர்.

சர்ச்சைக்குரிய இந்தச் சம்பவத்தில் கப்பலில் இருந்த தமது உறுப்பினர்கள் 11பேரும் நாட்டுப்பற்றாளர் ஒருவரும் வீரமரணமடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர்.

அவர்களின் பெயர் விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

★ லெப்.கேணல் அன்புக்குமரன் (வல்லிபுரம் சிவகுமார்) - ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை.

★ லெப்.கேணல் செந்தமிழ் அல்லது வீரமணி (சின்னராசா சிவரூபன்), - முள்ளியான், வெற்றிலைக்கேணி.

★ லெப்.கேணல் சுதிர் (செல்வரட்ணம் சசீந்திரன்) - மீசாலை தெற்கு, சாவகச்சேரி

★ லெப்.கேணல் கஜேந்திரன் (நல்லையாகிருஷ்ணன் சுபில் தினேஸ்) - கிளிநொச்சி.

★ மேஜர் நிர்மலன் (ரணராஜா ரகுநாத்)- நெடியகாடு தெற்கு வீதி, வல்வெட்டித்துறை.

★ மேஜர் கன்னியநாடன் (பொன்னம்பலம் கிருபாகரன்) - பேராலை, பளை.

★ மேஜர் வள்ளுவன் (துரை சைலேஸ்வரன்) - மயிலங்காடு ஏழாலை தெற்கு.

★ மேஜர் நிமால் அல்லது நிமல் (தங்கராசா செல்வக்குமார்) - பரந்தன், கிளிநொச்சி.

★ மேஜர் மணியரசன் (முத்துலிங்கம் லவக்குமார்) வின்சன் வீதி, நெடுங்கேணி.

★ மேஜர் வீரநாதன் (தியாகராசா தயாநிதி) - மேழிவனம், முல்லைவீதி, மாங்குளம்.

★ கப்டன் செழியன் அல்லது அன்புவெற்றி (சொக்கலிங்கம் ஜெகன்) - செல்வா வீதி, கிளிநொச்சி.

நாட்டுப்பற்றாளர் மோகன் - நாரந்தனை, ஊர்காவற்றுறை.

ஆகியோரே உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# வாழ்வில் மறக்க...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாளரிடம் தெரிவித்ததாவது:-

நான் பிறந்து வளர்ந்த சூழல் ஒரு கிராமப்புறமாக இருந்ததால் மாணவப் பருவத்தில் மெய்வன்மைப் போட்டிகளில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை.

எமது பகுதியில் சிறுவர் முதல் முதியவர் வரை கரப்பந்தாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இதனால் அதில் நானும் முழுமூச்சுடன் ஈடுபட்டு விளையாடி வந்தேன். இதனால், எனது பாடசாலை வாழ்க்கையிலும் கரப்பந்தாட்டத்திற்கு முதன்மை கொடுத்து பங்குபற்றி வந்தேன்.

கடந்த 1998ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியில் சேர்ந்து கல்வி பயிலும் சந்தர்ப்பம் கிடைத்தது. அச்சந்தர்ப்பமே எனது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது.

அங்கு தடகளப் போட்டிக்கு பயிற்றுவிப்பாளர்களாக இருந்த என். நாகமணி மற்றும் உடற்கல்விப் பிரிவு விரிவுரையாளர்கள் எனது உடல் அமைப்பையும், குண்டெறிதல் திறமையையும் பார்த்து குண்டெறிதலில் கூடிய கவனம் எடுத்து பயிற்சி பெறுமாறு ஆலோசனை வழங்கியதோடு, அதற்கான பயிற்சிகளையும் நுணுக்கங்களையும் நன்கு கற்றுத் தந்துள்ளனர்.

இவர்களுடைய வழிகாட்டலில் முதல்முறையாக 1999ஆம் ஆண்டு மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றிய நான் அவ்வருடமே முதலாம் இடத்தைப்பெற்றேன். அன்றிலிருந்து தொடர்ந்து 5 வருடங்களாக மாவட்டமட்ட போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று வருகிறேன்.

முதல் முறையாக கடந்த 2001 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணப் போட்டிகளில் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்றேன். சாதனை எதனையும் நிலைநாட்டவில்லை. அது எனக்கு பெருமனக்குறையாகவே இருந்து வந்தது.

அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆர்வத்தினால் குண்டெறிதல் நிகழ்வில் தேர்ச்சி பெற்ற பலரிடம் சென்று பல்வேறு வகையான பயிற்சிகளையும் நுணுக்கங்களையும் பெற்று கடுமையான பயிற்சியில் ஈடுபட்டு வந்தேன். இப்போது அதனைச் சாதித்து விட்டேன் என்றார். (ம-5)

## போர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கால நிர்வாகத்தை புலிகளிடம் வழங்கும் விடயத்தில் அரசு உறுதியான முடிவு எடுக்கவேண்டும். சர்வதேச சமூகத்தினரும் இராஜதந்திரிகளும் உத்தேச இடைக்கால நிர்வாகம் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படவேண்டும் என்றே கருதுகின்றனர்.

அரசியல் மற்றும் நிதி விடயங்களில் அதிகாரம் உள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான வரைவு ஒன்றை அரசு முன்வைத்தால் அரசுடன் மீண்டும் பேச்சு நடத்துவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் - என்றார் தமிழ்ச்செல்வன்.

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் பங்களிப்பு பற்றிக் கேட்டதற்கு, அது உரிய நேரத்தில் முடிவு செய்யப்படும் என்று தமிழ்ச்செல்வன் கூறினார்.

ஆனந்தசங்கரியின் தலைமை பற்றிய கேள்வி ஒன்றுக்கு, "அந்த விடயத்தில் நாம் தலையிடுவதில்லை. அது அவர்களின் கட்சி உள் விவகாரம்"- என்றும் அவர் தெரிவித்தார். (ம)


CSC பிரசன்னா கணனிக் கல்வி நிலையம்


K.K.S. றோட், சுன்னாகம்

எமது நிலையத்தில் குறைந்த செலவில் பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

- பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரைகள்.
- றோனியோ வேலைகள்
- Printing (Lazer And Dotmatic, Colour)
- Scanning
- CD Writing (MP3, Audio, Video)
- Computer sales and Repairing
- News Paper Advertisement Graphics & Designning.

தென்னிந்தியாவில் இருந்து

யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு யாழ்ப்பாண மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி 2ஆவது முறையாக வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்



ராஜகுருசாமி அவர்கள்

★ கைரேகை ★ ஜாதகம் ★எண்கணிதம் ★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்

இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.

காலை 9.00மணி முதல் மாலை 6.00மணி வரை

ராஜகுருசாமி T.P. 5867

மிலேனியம் மல்ரி கொம்பிளக்ஸ்

60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.

(19953)

விற்பனைக்கு

Legal அளவுடைய Gestetner offset அச்சு இயந்திரம் (England) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

250, Palaly Road, Kantharmadam. Jaffna.

T.P.0777-064377

(19965) (32)

துரித சாரதிப் பயிற்சி

குழுக்களாக உங்கள் பகுதிகளிலேயே ஒழுங்கான துரித வாகன சாரதிப்பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் (லைசன்ஸ்) விரைவில் பெற்றுக்கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளுங்கள்:

★ கனன் தொலைத்தொடர்பகம், 535, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

★ தயூரி வீடியோ, பஸ் நிலையம், அச்சுவேலி.

அடுத்த குழுவுக்கான பயிற்சி ஜூலை 15 இல் ஆரம்பமாகும்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.